
உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துன்மதி ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10-12-81 [இதழ் 1



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[☆]—

துஞ்சப் பிணமென்னச்
சுற்றத்தார் இட்டத்தார்
அஞ்சச் சலிக்க
அருவருக்கக்—கொஞ்சமுற
வந்த தனுஇருந்து
வாழ்ந்துநான் என்னவைத்த
தந்திரமென் சொக்கநா தா.

—சொக்கநாத வெண்பா. 83

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 | 10-12-81 | இதழ் 1

உட்பொருள்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 23
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ
சிவமயம்

தருமையாதீனம்

சமயவளர்ச்சித் திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு

ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ‘ஞானசம்பந்தம்’ கற்போர் மனத்தைக் கவரும் சிறந்த திங்கள் இதழாகும். சமயம், இலக்கணம், இலக்கியம், மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள், எதிர்காலம் ஆகியவற்றுடன் வெளிவருவது. சமய உணர்வுகளை உணர்த்துவதற்குரிய அரிய இவ்விதழ் நாற்பதாண்டுகள் நிறைவுபெற்று நாற்பத்தோராம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

சந்தாதாரர்கள் மறவாமல் ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிதாகச் சேர்வோர் பின்வரும் முகவரிக்கு ரூ. 10. அனுப்பிப் பெற்றும் படித்துப் பயன் அடையலாம்.

இவ்வறிவிப்புப்படிமலர்ஆரம்பத்தில்பணம்அனுப்பாமல் பிறகு நிறுத்தப்பட்டபின் கடிதம் எழுதுவதைத் தவிர்க்கவே இதழ் ஆரம்பத்தில் நினைவூட்டுகிறோம்.

தடையில்லாமல் இந்நூலைக் கற்க விரும்புவோர் ஆயுள் சந்தா ரூ. 100. செலுத்தி தொடர்ந்து தானும் தனக்குப்பின் விரும்பும் ஒருவருக்கு எழுதிவைத்தும் ஞானசம்பந்தம் பெறலாம். இதுவரை 849 அன்பர்கள் ஆயுள்சந்தா கட்டி ஞானசம்பந்தத்தைப் பெற்றுப் படித்து வருகின்றனர்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	...	ரூ.	10—00
,,	(சிலோன்)	...	ரூ.	12—00
,,	(வெளிநாடு)	...	ரூ.	23—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)	...	ரூ.	100—00
,,	(வெளிநாடு)	...	ரூ.	125—00

விளம்பரம்

பின் அட்டை வெளிப்பக்கம்	**2-கலர்**	**ரூ.**	**300—00**
பின் அட்டை உட்பக்கம்	**1-கலர்**	**ரூ**	**200—00**
இதழின் உட்பக்கம்	**,,**	**ரூ.**	**100—00**

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் – 609 001
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :-

ஆயுள் சந்தா செக் அல்லது டிராப்ட் அனுப்ப **" ஞானசம்பந்தம் தருமையாதீனத் திங்கள் இதழ் "** என்கிற தலைப்பில் அனுப்பவேண்டும்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41 | துன்மதி - கார்த்திகை - 10—12—81 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பாரதி ஒரு சகாப்தம்

தீரர்பாரதி :

தேசபக்தியும் - தெய்வபக்தியும் இரு கண்கள்போல்வன. வரலாற்றில் இடம்பெற்ற சான்றோர்களுள் பலரும் இவ்விருதிறமும் பெற்றிருப்பதை அறியலாம். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் விடுதலைவேட்கையினை மக்கள் நெஞ்சிலே வீராவேசமாக விதைத்து - நாட்டுப்பற்றைக் கனலாக எழுப்பிவிட்ட தீரர்பலர். தமிழகமும் இத் தியாகவேள்வியில் பெரும்பங்கு வகித்தது. விடுதலை வேட்கைமிக்க தீரராக-தமிழ்நலம்போற்றும் கவிஞராக - பக்திவளம் சிறந்த சான்றோராக இக்காலத்தே தோன்றிய மகாகவிஞர்தான் அமரகவி. சுப்பிரமணிய பாரதியார். பாரதியாரை ஒரு கவிஞராக மட்டுமே காணுதல் - அல்லது விடுதலை வீரராக மாத்திரமே படம்பிடித்தல் நிறைவாகாது. அவர் ஒரு சகாப்தம். தமிழகத்தின் நீண்டவரலாற்றில் ஒரு மையப்புள்ளி.

பாரதியின்வேர் :

பாரதியாரின் பிறந்தநாள் நூற்றுண்டுவிழாவை அனைவரும் சிறப்பாகத் திட்டமிட்டுக்கொண்டாட ஆயத்தமாகி வருகிறுர்கள். பாரதியைப் போற்றுவார்பலரும் ஏதேனும்ஒருகோணத்தில் தங்களுக்குச் சாதகமாக அவரை—அவர்தம் கவிதைகளை வளைத்துப் பொருள்கொண்டு மகிழ்ந்துவருகிறுர்கள். எல்லா அரங்குகளிலும் பாரதிக்கு இடம் தரப்படுகிறது. என்றுலும் பல்வேறு முனைப்புக்களில் பாரதியாரின் வேர்க்கால் எது? எங்கே தெரிகிறது? என்று காண்பது அவருக்குச்செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும். தேசபக்தி – தமிழ்ப்பற்று – பெண்கள் விடுதலை – எளியநடை – ஆழமான சிந்தனைத்தேக்கம் என பலவுண்டு பாரதியிடம். என்றுலும் பாரதியாரின் அடித்தளம் – இவற்றுக்கெல்லாம் ஆதாரமான சுருதி எது? விடை எளிமையானதுபோல் தோன்றலாம். என்றுலும், ஆழமானசிந்தனைக்குப் பிறகே இதனை நிறுவஇயலும். பாரதியின் எல்லா எழுச்சிகளுக்கும் ஆதாரம் அவரது பக்தி; ஆழமாக வேர்விட்டுநின்ற தெய்வ பலம்; பேதமற்ற அன்பில் நிறைந்த கடவுள்நிலை. எங்கேயும் – எதிலேயும் பாரதியின் இந்த முத்திரையை எளிமையாக இனங் கண்டுகொள்ளலாம்.

உலகப்பெருங்கவிஞர் :

ஒரு நிறைவான கவிஞனுக்கு என்ன இலக்கணம்? தாய் நாட்டின் வரலாறு அவனுக்கு நன்கு தெரிந்திருக்கவேண்டும். நிகழ்காலத் தவறுகளைச் சாடும் மனுேபலம் வேண்டும். எதிர் காலத்தின் போக்கினை நிதானிக்கும் தீர்க்கதரிசனம் வேண்டும். பாரதியை – அவரது கவிதைகளின் ஊடே வரலாற்றுசிரியராக – நிகழ்கால விமர்சகராக – எதிர்காலம் உணர்ந்த தீர்க்கதரிசியாகக் காண்கிறேம். 'பாரதவீரர் மலிந்த நன்ருடு; மாமுனிவோர்பலர் வாழ்ந்த பொன்ருடு' என்ற வரலாற்றுத்தெளிவும், 'நெஞ்சு பொறுக்குதில்லையே – இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்' என்ற நிகழ்காலக் கொதிப்பும், 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடுவோமே' என்ற நீள்நோக்கும் பாரதியாரை உலகப்பெருங்கவிஞர்களின் வரிசையிலே முதலிடம் பெறச்செய்வன. 'நமக்குத் தொழில்கவிதை நாட்டுக்கு உழைத்தல்' என்று நோக்குக்கூறி, இவற்றை மேற்கொண்டால் உமைக்கினிய மைந்தன் கணநாதன் நம் குடியை வாழ்விப்பான் எனநம்பும்பக்தியிலே பாரதியாரை அடையாளம் காண்கிறேம்.

வேண்டும் இந்த அடிமை :

சிவபிரான், விநாயகர், முருகன், திருமால், கலைமகள், மாரியம்மன், தெருஓரத்து வீரம்மை, முதலாகப் பலதெய்வத்தையும் பாடும் பாரதியே 'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று சொல்லி அலையும் அறிவிலிகாள்' என்று சாடி அறிவேதெய்வம் என முடிப்பார். அவரவர்கள் தகுதிக்கும் அறிவிற்கும் தக்க, சமூகம் உடன்பட்ட பல தெய்வங்களை உடன்படும் போக்கும், ஞானமுதிர்வில் காணும் 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்ற தெளிவும் நம்மவர்களுக்கு வருதல் வேண்டுமென்ற உணர்வில் பாரதியின் தெய்வக் கொள்கை புலப்படக்காண்கின்றோம். மனிதன் அரசியல், சமூகம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் விடுதலைபெறவேண்டும் என்று விரும்பும் பாரதி, தெய்வ சந்நிதானத்தில் என்றும் அவன் அடிமைபட்டே கிடத்தல் வேண்டுமென்று ஒளியூட்டுகின்றார்.

"பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம் - பரி
பூரண னுக்கேஅடிமை செய்து வாழ்வோம்"

என்ற வரிகளில் பாரதியாரின் கடவுட்பற்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கக் காண்கின்றோம்.

புண்ணியம்கோடி :

அன்னசத்திரம், ஆலயம் இவற்றை அமைத்தனர் முன்னோர். இவற்றைப் பராமரிக்கவென்றே ஏராளமான நிலபுலன்களையும் எழுதிவைத்தனர். பலர்க்கும் பயன்படவேண்டிய இவற்றைச் சிலரே தம்மகப்படுத்திக்கொண்டு இவ்வறங்களை நடைபெற ஒட்டாது முடக்கினர். தட்டிக் கேட்கும் திறம் ஏனையோர்க்கும் இல்லை. கேட்டற்குரிய அறிவுவளமும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. முன்னர் வைத்த சத்திரங்கள் செம்மையுற நடைபெறவில்லை. ஆலயங்கள் நன்கு பரிபாலிக்கப்பெறவில்லை. இந்நிலையில் புதியதாய்ச் சத்திரம் அமைப்போரை - ஆலயம் கட்டுவோரை நோக்கிப் பாரதியார் புத்திமதி கூறுகின்றார். இவற்றைஅமைப்பது பின்னர் ஆகட்டும்; முதலில் ஏழைகளுக்கு எழுத்தறிவை ஊட்டுங்கள். அதுகோடி புண்ணியம் என்கிறார்.

'அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்'

இவை பாரதியின் ஆழ்ந்த சமூக அறிவிற்குச் சான்று பகர்வன. அன்னசத்திரமோ, ஆலயமோ வேண்டாம் என்பதில்லை அவர்

வாதம். இருப்பனவற்றை உரியவாறு பராமரிக்கும் திறம் வளர-மக்களை - குறிப்பாக ஏழைகளை நல்ல கல்வி அறிவுடையவர்களாக்குங்கள் என்பதில் பாரதி நமது நாட்டத்தை நன்கு திருப்புகின்றார்.

பள்ளிகளைக் கோயிலாக்குவோம் :

கோயில்கள் வேண்டாம் என்பது பாரதி வாதம் என்பர் சிலர். இது அவர்களது விருப்பத்தைப் பாரதிமேல் ஏற்றும் சாமர்த்தியம். பாரதியார் இதனை வேறு ஒரு இடத்தில் நன்கு தெளிவுபடுத்துகின்றார்.

'பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்குவோம் - எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்!'

என்று சூளுரைக்கிறார். புதிய கோயில்கள் வேண்டாம் என்பதில்லை. மாணக்கர்களுக்கு அறிவு புகட்டும் கலாசாலைகளை ஒழுக்கமும் - பண்பாடும்-பக்தியும் - நிறைந்தனவாக உருவாக்குவதன்மூலம் அவற்றையே இறைவன் உறையும் கோயில்கள் நிலைக்கு உயர்த்துவோம் என்பது அவரது விரிந்த எண்ணம், சிலர் நினைப்பதுபோல் கோயில்களைப் பள்ளிகளாக்கப் பாரதி விரும்பவில்லை. அப்படியும் ஆக்கலாம், அதற்குரிய உயரிய பண்புகளும், நல்லுணர்வும் மக்கள் மத்தியில் உருவாகுமானால் கோயில்களையே பள்ளிகளாக்கவும் தடையில்லை. ஒருகாலத்தில் கோயில்களே கலாசாலை, மருந்தகம், கலைவளர்பண்ணை என்றெல்லாம் விளங்கியிருந்தன. இதற்கு வரலாறு சான்றுகூறும்.

தனிஒருவன் யார் ?

'தனிஒருவனுக்கு உணவிலை எனின் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற ஆவேசமான பாரதி வாக்கிற்குப் பலவேறு பொருள் கூறப்படுகிறது. ஒருவன் என்ற சொல் ஒப்பற்றவன் - தன்னிகரற்றவன் என்று இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளது. சிவபெருமானை ஒருவன் என இப் பொருளில் அப்பரடிகளும் வழங்குவர். ஏகன் என மணிவாசகர் மொழிவர். இறைவன் திருவருளால் மழைபொழிகிறது. வளம் சுரக்கிறது. பெற்றவளத்தால் மக்கள் மகிழ்ந்து நித்திய பூசைகளையும் சிறப்புவிழாக்களையும் எடுக்கின்றனர். வள்ளுவரும் வான்சிறப்பில் 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்ற குறளில் வான்சிறப்புக் கூறுவார்போல் இறைவனுக்கு இயற்றப்

யடும் நாள் வழிபாடு மற்றும் சிறப்பு வழிபாடுகளை உடன் படுகிறார். இறைவனுக்கு எனப்படைக்கப்படும் எந்த உணவும் ஏழைகளுக்கே சென்று சேர்வன. பரமகருணையாளன் தந்த வளத்தால் வாழும்மக்கள் நன்றிமறந்து ஒப்பற்ற இறைவனுக்கு உணவு படைப்பதைச் செய்யாது போனால் சமூகம் சீர்கெடும் என்ற உணர்வில்தான் பாரதியின் குமுறல் இவ்வரிகளில் வெளிப்படுகின்றது. உண்ணாது உறங்காது இயங்கும் இறைவனுக்கு உணவு தேவை இல்லை. எனினும் உயிர்கள் உயர்வு பெற நிவேதனம் செய்தல் (அறிவித்தல்) அவசியம் என்னும் கருத்தைப் பாரதி பக்தி ஆவேசத்தால் கூறுகின்றார் என்று பொருள் கொண்டோமானால் மேலும் சிறப்புடையதாகும்.

கனவுகள் நனவாக !

இவ்வாறு பக்தி, அறிவு, பண்பாட்டு உணர்வோடு – பைந் தமிழ்ப்பாமாலைகளைப் புனைந்த அமரகவி பாரதியாரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவில் அவருடைய பல்வேறு சிந்தனை களையும் சீர்தூக்கி ஆராய்வது தமிழர்கடனாகும், தமிழ்வல்ல சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையில், பல்வேறு பெருவிழாக்களைத் திட்டமிட்டு நடத்திவரும் தமிழ்நாடு அரசு, இதுபோது பாரதியாரின் பிறந்தநாள் நூற்றாண்டுப் பெரு விழாவை 1981 டிசம்பர் 11 முதல் தொடங்கி 1982 டிசம்பர் 11 வரை ஓராண்டுக்காலத்திற் (அவர் பிறந்த எட்டையபுரத் திலும், சென்னையிலும் மாவட்டத் தலைநகரங்களிலும், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும்) சீரும் சிறப்புமாகக் கொண்டாட விருப்பது பெரிதும் பாராட்டிற்குரியது. அரசுச் சார்பற்ற பிற நிறுவனங்களும் பாரதியாருக்குச் சிறப்பு விழாக்கள் காண்பது மகிழ்ச்சிக்குரியது. வெறும் கூட்டம் - ஆரவாரம் - கேளிக்கை என்ற நிலைமாறி விழாக்கள் பயனுள்ள ஆய்வுகள் – கண்டு பிடிப்புக்கள் – உண்மை காண்டல் என விரிவடைதல் இன்றி யமையாதது, ' என்றன் பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திடவேண்டும் ' என்று பராசக்தியை வேண்டினார் பாரதியார். பாரதியார் கண்ட கனவுகள் நிறைவேற - பேதமற்ற சமுதாயம் உருப்பெற - பாரதி காட்டியவழியில் நடையிடு வோம்! நன்மை காண்போம் !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆவணிமூல விழாவில் வழங்கியருளிய

ஆசியுரை

8—9—1981

" பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் "

பண்சுமந்த பாடல், பெண்சுமந்த பாகம், விண்சுமந்த கீர்த்தி, கண்சுமந்த நெற்றி, மண்சுமந்த மாமுடி, புண்சுமந்த பொன்மேனி இவற்றை எல்லாம் உடையவன் செந்தமிழ்ச் சொக்கன் என்று இப்பாடல் மூலம் அறிவிக்கின்றார் மாணிக்க வாசகர். இப்பாடலை உற்றுணர்ந்தால் வாழ்க்கைக்கு வேண்டிய நெறிமுறைகள் பலவும் தெளிவாகும்.

பண்ணும் பாடலும்

முதலில் " பண் சுமந்த பாடல்... " என்கின்றார். பாடல் என்றால் பண்ணைச் சுமந்திருக்க வேண்டும். பண்ணமைப்பு இல்லாத பாடல் பாடல் ஆகாது. அதுபோலவே பாடற்கு இயைபு இல்லாத பண்ணும் பண்ணாகாது. இக்கருத்தை வள்ளுவரும்,

" பண்ணென்னும் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னும்
கண்ணோட்டம் இல்லாத கண் "

என்று கூறுகின்றார். பண் என்பதை இக்காலத்தார் " மெட்டு " என்று கூறுகின்றனர். பண்ணும் பாடலும் உயிரும் உடலும் போன்றது. உயிரால் உடலுக்கும் உடலால் உயிருக்கும் சிறப்புக் கிடைக்கிறது. அதே போலப் பண்ணால் பாடலுக்கும்

பாடலால் பண்ணுக்கும் சிறப்புக் கிடைக்கிறது. எனவே தான் பரமேசுவரன் பண்சுமந்த பாடலை உடையவனுகத் திகழ்கிருன். பண் இல்லாத பாடலை அவன் விரும்புவதில்லை. மேலும் பண் சுமந்த பாடலுக்குத்தான் பரிசும் படைத்தருள்கின்ருன்.

பெண்ணும் ஆணும்

அடுத்துப் பெண் சுமந்த பாகத்தன் என்கின்ருர். இறைவன், திருமேனியின் இடது பாகத்தில் உமாதேவியைத் தாங்கியிருக்கின்ருன். இதனைப் 'பெண் சுமந்த பாகத்தன்' என்று மணிவாசகரும் "மாதோர் கூறன்" என்று திருஞான சம்பந்தரும், 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்று ஐங்குறுநூற்றுக்கடவுள் வாழ்த்துப்பாடலால் பெருந்தேவனுரும் கூறுவன கொண்டு தெளியலாம். இக்கருத்தில் தான் இறைவனை அர்த்தநாரீசுவரர் எனவும் அழைப்பர். அர்த்தம் என்ருல் பாதி; நாரி என்ருல் பெண். பாதிப் பெண்ணுருவன் என்பது பொருளாகும்.

இங்ஙனம் இறைவன் மட்டும்தான் பெண்ணொருபாகன் என்பதில்லை. தாவரம் முதல் தேவர்கள் வரை அனைத்துயிர்களுமே பெண்ணொரு பாகமாகவேத் திகழ்கின்றன. தாவர இனத்திலும் விலங்கு இனத்திலும் பறவை இனத்திலும் பொதுவாக எல்லா உயிரினங்களிலுமே இடது பாகத்தில் பெண் தன்மையும் வலதுபாகத்தில் ஆண் தன்மையும் அமைந்துள்ளன. என்பதை உற்றுநோக்குவோர் உணரக் கூடியதாகும். மனிதர்களிடையேயும் ஆணிடத்தில் பெண்மையும் பெண்ணிடத்தில் ஆண்மையும் அமைந்துள்ளன. ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுதிப்பட்டவர்களைப் பெண்கள் என்றும். பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுதிப்பட்டவர்களை ஆண்கள் என்றும் அழைக்கின்ருேம். இந்நிலையில் இவ்வேற்றத் தாழ்வுகள் மாறுகின்ற காரணத்தால் ஆண் பெண்ணுவதும் பெண் ஆணுவதும் நிகழ்கின்றன. இச் செய்தி சமீபகாலச் செய்தித் தாட்களில் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது.

இவற்றை எல்லாம் உள்ளடக்கிய தத்துவ நிலையைத்தான். 'பெண் சுமந்த பாகத்தன்' என்று அப்பொழுதே வாதவூரர் பாடியருளினுர்.

நாட்டார் நலம்பெற

'விண் சுமந்த கீர்த்தி' என்று அடுத்துக் கூறுகின்ருர். விண் என்ருல் ஆகாயம் என்று பொருள்படும். உலகிலுள்ள அண்டங்கள் எல்லாம் ஆகாய மண்டலத்தில்தான் இயங்கிக்

கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் அதனதன் வியாபகம் (ஈர்ப்புச் சத்தி) ஒரு குறிப்பிட்ட எல்லைவரை உள்ளது. இம்மண்மண்டலத்திற்கும் அதுபோன்று ஒரு குறிப்பிட்ட எல்லை வரை வியாபகம் உண்டு. இம்மண்ணுலகில் வாழ்கின்ற மக்களின் மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களால் நிகழும் நன்மை தீமைகள் மண் மண்டல வியாபகத்தில் உள்ள விண்மண்டலத்தில் பரவுகின்றன. நல்லவை பரவினுல் நன்மை கிடைக்கும். தீமை பரவினுல் நலம் குறையும்; தீமைதான் பெருகும். ஆதலின் மக்களின் எண்ணங்களும் பேச்சுக்களும் செயல் முறைகளுமே அவர்களை உயர்த்தவும் தாழ்த்தவும் செய்கின்றன. இதனுல்தான் விஞ்ஞானிகளும் வானவெளியைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி வருகின்றனர். விஞ்ஞானிகள் காயத்தால் செய்யும் செயலைமட்டும்கூறினுலும் மெய்ஞ்ஞானிகள்மற்ற இரண்டையும் சேர்த்து மூன்று கரணங்களாலும் நன்மைகளைச் செய்தால்தான் நாட்டார்க்கு நன்மைகளே விளையும் என்று கூறினர். எனவே மக்களாய்ப்பிறந்தோர் நற்சிந்தை, நல்வாக்கு, நற்செயல் உடையவர்களாகத் திகழ வேண்டும். இதனுல் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்க்கும் அவர் சார்ந்து வாழும்நாட்டிற்கும் நலம்விளையும். மக்கள்புகழுக்குரிய காரியங்களைச் செய்து புகழுக்குரியவர்களாக வாழ வேண்டுமேயல்லாது இகழுக்குரியவர்களாக வாழ்தல் கூடாது. இதைத்தான் 'விண் சுமந்த கீர்த்தி' எனும் தொடரில் ஆளுடைய அடிகள் விளக்குகின்ருர். கீர்த்தி என்ருல் புகழ் என்பது பொருள். விண் சுமந்த புகழ் என்ருல் அவ்விண், புகழைச் சுமக்குமாறு அதன் கீழ் வாழ்வோர் நன்மையான காரியங்களைச் செய்து புகழ் பெற்று வாழ வேண்டும் என்பது கருத்து. இக்கருத்தில்தான் திருவள்ளுவரும்,

> "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்ருமை நன்று"

என்ருர். இதனையே, "மன்னுஉலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந்தனரே" என்ருர் புறநானூற்றுப் புலவரும். இவர் பெயர் பெருந்தலைச்சாத்தனுர்.

மூன்று கண்கள்

அடுத்துக் கண் சுமந்த நெற்றியைக் காண்போம். இறைவனுக்கு மூன்று கண்கள் குறிக்கப்படுகின்றன. வலக் கண் சூரியன். இடக் கண் சந்திரன். ஆண்டவன் இவ்விரண்டாலும் ஒளி நல்கி உலகுயிர்களைக் காக்கின்ருன். மூன்ருவதாக

நெற்றியில் திகழ்வது அக்னிக்கண். இதனை நெற்றிக் கண் என்பர். மூன்று கண்களாலும் உயிரினங்களுக்கு வேண்டிய உணவு வகைகளை எல்லாம் உற்பத்தி செய்தும், வேண்டிய அளவு தட்ப வெப்பத்தை நல்கியும் காத்தருளுகின்ருன், நெற்றிக்கண் இறைவனுக்கு எப்பொழுதும் வெளிப்படுவதில்லை. கருவேள் எரிவதற்கும், செவ்வேள் உதிப்பதற்கும், நக்கீரர் அறிவுத் தெளிவு பெறுவதற்கும், உமாதேவியார் இறைவனின் இருகண்களைப் பொத்திய பொழுது உலகுயிர்களைக் காப்பதற்குமே நெற்றிக்கண் திறக்கப்பட்டதாகக் காணப் பெறுகிறது.

இறைவன் எப்படியோ அப்படியே உயிரினங்களும் சிறப்பாக மனித இனமும் இறைவனுல் படைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனுக்கும் இரண்டு கண்களுடன் நெற்றியில்ஒரு கண்ணும் உண்டு. உடலிலுள்ள ஆறு ஆதாரங்களில் ஆஞ்ஞை என்று சொல்லப்படும் புருவ நடுவில் நெற்றிக்கண் எல்லோருக்கும் இருக்கிறது. யோக நெறி கை வந்தவர்கட்கு இது புலனுகும்.

அறிவும் தொழிலும்

அடுத்து, "மண்சுமந்து கூலி கொண்ட மாண்பை அறிவிக்கின்ருர் மணிவாசகர். கூலிகொண்டு மண்சுமந்தாரேயல்லாது மண் சுமந்து பிறகு கூலிகொள்ளவில்லை. செய்யுளாதலின் எதுகைநோக்கி 'மண் சுமந்து' என்பதை முதலில் கூறுகின்ருர்.

மண் சுமத்தல் முடியின் செயல். இதில் ஒரு தத்துவம் அடங்கியுள்ளது. உயிர், உடலைக் கொண்டுதான் எல்லாச் செயல்களையும் செய்கிறது. இந்த உடல், அறிவுக்கருவி என்றும் தொழிற்கருவி என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மெய், வாய், கண், மூக்கு, செவிஇவ்வைந்தும் அறிவுக்கருவி. வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் இவ்வைந்தும் தொழிற்கருவி. அறிவுக் கருவியாகிய நாக்குச் சுவையுணர் கருவி என்றும், கண் ஒளியை உணரும் கருவி என்றும், காது ஒலியைக் கேட்டுணரும் கருவி என்றும், மெய் உற்றறியும் கருவி என்றும், மூக்கு நாற்றம் உணரும் கருவி என்றும் கூறப்பெறும். மெய் என்பது உடல் முழுவதையும் குறிக்கும் என்ருலும் தலைமைபற்றித் தலையைக் கொள்ளவேண்டும்.

அறிவுக்கருவிகள் தலையில் இருக்கின்றன. தொழிற்கருவிகள் தலைக்குக் கீழே உள்ளன. இதனுல் அறிவு தலையானது

என்றும் தொழில் அடுத்த நிலையில் உள்ளது என்றும் அறியலாம். அதே நேரத்தில் அறிவு, தொழிலுக்கும் முதன்மை கொடுக்க வேண்டும் என்பதை, முடியில் மண் சுமந்த திருவிளையாடலால் மகேசன் அறிவிக்கின்றார். அவர் மட்டுமல்ல; மனித இனமும் முடியில் சுமை தாங்கி இதனை உணர்த்திக் கொண்டு தான் இருக்கின்றது. இதனால்தான் போலும் அப்பரடிகளும் சிறந்த ஞானியாயிருந்தும் (அறிஞராயிருந்தும்) உடலுழைப்பு இன்றியமையாதது என்று உழவாரப்பணியினை இடைவிடாமல் செய்வதன் மூலம் விளக்கிக்காட்டினார். அறிவுத்துறையில் பணியாற்றுவோர் உடலுழைப்பும் மேற்கொள்ள வேண்டும். அது உடல்நலத்திற்கும் சுகாதாரத்திற்கும் உலகியல்வாழ்விற்கும் நன்மை பயப்பதாகும்.

அறிவுக்கு அடுத்த தரத்தில் இருப்பது என்பதற்காக அது உதாசீனப்படுத்தக் கூடாது என்பதனை உணர்த்தவே இறைவன் முடிமீது மண் சுமந்தான். இதனைப் பலரும் உணர்வதில்லை. "வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்" என்ற அப்பர் அருள்வாக்கு இத்திருவிளையாடலை அறிவிக்கிறது. உணராததால் இழப்பு அம்மக்களுக்கே! பிறர்க்கில்லை.

உரிமையும் கடமையும்

புண் சுமந்த பொன்மேனியினால், ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும். என்பதையும், கடமைதவறினால் கடுந்தண்டனைக்குள்ளாவார்கள் என்பதையும் உணர்த்துகின்றார்.

வேலை செய்து கூலி பெறுதலே இந்நாள் வரையிலுள்ள வழக்கமாகும். அதிலேயும் ஒரு புரட்சியை ஆண்டவன் இத்திருவிளையாடலால் செய்து காட்டினார். பிட்டமுதைக் கூலியாக வாங்கிக்கொண்டுதான் வேலைக்குச் செல்கிறார். ஆனால்வேலையே செய்யாமல் விளையாடுகிறார். இவ்விளையாட்டிலும் ஓர் உண்மை பொதிந்துள்ளது.

உலகில் எவரும் உரிமையைப் பெறவே விரும்புவர் கடமையைச் சரிவரச் செய்யார். இதனையே பரம்பொருள் வைகைக் கரையில் நடித்துக் காட்டுகின்றார். இக்காலம் வரையிலும் எவரும் பெறாத நிலையில் கூலியை முதற்கண் கேட்டுப்பெற்றார். இது மக்களின் உரிமை விரும்புவதைக் காட்டுகிறது. பின்னர், அவர் தம் கடமையாகிய கரை அடைத்தலைச் செய்யவில்லை. இது மக்களின் கடமையுணர்வின்மையை

அறிவிக்கிறது. கடமை உணர்வின்றி உரிமை உணர்வுமட்டும் கொண்டு வாழ்வாரைக் கடவுள் அரசின்வழியே தண்டிப்பார் என்பதைத்தான் அப்பாண்டியமன்னனிடம் பிரம்படிபெற்றதன் மூலம் உணர்த்துகின்ருர். நாம் நன்னெறியில் நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் இத் திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார். இவற்றை உணர்ந்து செயற்படுதல் நமது கடமையாகும்.

வேலைக்கு உணவுத்திட்டம் என்று அரசு கொண்டுவந் திருப்பதுகூடப் பல்லாண்டுகளுக்கு முன்பே இறைவன் இத்திரு விளையாடலால் காட்டிய ஒன்றேயாகும். அதுவும் வேலைசெய்வ தற்கு முன்பு உணவு பெறுதல் என்ற முற்போக்கு நிலையில் நடித்துக் காட்டுகின்ருர். இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்த் தால் ஆண்டவன் பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் திகழ்பவன் என்பதை உணரமுடிகின்றதல்லவா? எனவே கடமைஉணர்வோடு செயல்படவேண்டும் என்பதனை உணர்த்தவே கண்ணுதற்கடவுள் பொன்மேனியில் புண் பெற்ருர் என்பதனை உணர்ந்து உய்வோமாக!

புலமைக்குப் பரிசு

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும் சொக்கநாதப் பெருமான் அருள்விளையாடல் நிகழ்ந்த புனித நாளாகிய இவ் ஆவணிமூலத் திருநாளில் அப்பெருமானின் அடியொட்டி, மொழித்துறையிலும் சமயத்துறையிலும் தத்துவத்துறையிலும் அறிவியல் துறையிலும் பல்லாண்டுகள் பணியாற்றிவரும் அறிஞர் பெருமக்களைக் கடந்த 30 ஆண்டுகளாகப் பாராட்டிப் பட்டம் அளித்து அவர்கள் மென்மேலும் அத்துறையில் ஆக்க பூர்வமான செயல்கள்செய்ய அருளாசிவழங்கப்பட்டு வருகிறது. அம்முறையில்இவ்வாண்டு தமிழ்த்துறையில்புலமைநலம்சான்ற அன்பர் டாக்டர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கட்குச் 'சங்கத் தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டம் அளித்துச் சொக்க நாதப் பெருமானின் ஆசிக்கவசமாகப் பொன்னுடை போர்த்தி ஆசி வழங்கியுள்ளோம். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிசெய்து வருபவர். மொழிப் புலமையோடு சமய ஈடுபாடும் உடையவர். அவர் மேலும் இத் துறையில் பணிசெய்து நலம் பல பெற்று நீடுவாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

தீமைகளைச் சாடுங்கள்

(புலவர் திரு. இரா. செ.)

கலிகாலம் நடக்கிறது ; மக்கள் வாழ்வில்
    கண்ணியங்கள் குறைகிறது ; வறுமை ஓர்பால்
புலிபோலப் பாய்கிறது ; அறனும் அன்பும்
    புல்லரித்துத் தேய்கிறது ; உண்மை, நீதி,
நலிவுற்று மாய்கிறது ; கேட்பா ரற்று
    நாடழிந்து வருகிறது ; தட்டிக் கேட்கும்
வலிவழிந்து தாழ்கிறது ; ஆட்சிச் செங்கோல்
    ஆணவத்தில் நிமிர்கிறது ; யாரே காவல் !

இறையருளே அல்லாது இந்த நாட்டை
    ஏற்றமுறச் செய்வதற்கு மார்க்கம் இல்லை !
மறைமுகமாய் ஆள்வோர்கள் பக்தி மார்க்கம்
    மாய்வதற்குச் செய்கின்ற கேடு நூறு !
அரைகுறையாய் தடுமாறும் மக்கள் செய்யும்
    ஆர்ப்பாட்டம் பலனேனும் தருதல் இல்லை !
முறையான பண்பாட்டைப் பக்திப் போக்கை
    முட்டுவதே இனிமார்க்கம் ; யாரே செய்வார் !

நாலுபத்து ஆண்டுகளாய் மக்கள் வாழ்வில்
    நலிவகற்றிப் பொலிவேற்றி அடக்க மாகச்
சாலநலம் விளைத்துவரும் திங்கள் ஏட்டை
    சான்றோர்கள் அறிவார்கள் ; தருமை தந்த
சீலமிகும் சிவ'**ஞான சம்பந்த**'த்தைச்
    சிறப்பித்தல் அன்பர்களின் கடமை யாகும் !
வேலெடுத்துப் பகைமுடிக்கும் வீரத் தோடு
    வெற்றிநடை புத்தாண்டில் இடுதல் கண்டீர் !

பத்தோடு பதினொன்றாய் இந்த ஏட்டைப்
    பார்ப்பார்கள்; பார்க்கட்டும் ! விலகி நின்று
புத்தமுதத் தமிழ்காத்துச் சமய வாழ்வில்
    புகமுயலும் கேட்டுக்கு இடங்கொ டாது
எத்திக்கும் புகழ்மணக்க இந்த ஏடு
    இயற்றிவரும் பணியறிவீர் ! உங்கள் ஏட்டைத்
தித்திக்கச் செய்யுங்கள் ! நம்மைச் சூழ்ந்த
    தீமைகளைச் சாடுங்கள் ! பக்தி வெல்லும் !

திருச்சிராப்பள்ளியில்

தமிழ் நாடு அரசு கூட்டிய

இந்து சமய உயர் மட்ட ஆலோசனைக் குழுவில்

தருமையாதீனம் வழங்கிய

ஆலோசனைக் குறிப்புக்கள்

18—11—1981

1. இந்து மக்களின் சமய உணர்விற்கும், வழிபாட்டிற்கும் தமிழகத்தில் உள்ள இந்து ஆலயங்களும், இதர இந்து சமய நிறுவனங்களும் – பொதுவாக இயங்கவேண்டிய நிலை குறித்து ...

இந்து மக்களின் சமய உணர்விற்கும், வழிபாட்டிற்கும் திருக்கோயில்களும் திருமடங்களும் பலநூற்றுண்டுகளாகப் பணியாற்றி வருகின்றன. இவற்றின் நடைமுறை மற்றும் இயக்கங்கள் பற்றிச் சம்பிரதாயமான நடைமுறைகள் உள்ளன. ஸ்தாபனத்தின் அடிப்படை நோக்கிற்கு மாறுபடாது இவற்றின் இயக்கங்களைத் தீவிரப்படுத்தலாம். எல்லா ஆலயங்களிலும் நித்திய, நைமித்திக பூஜைகளைச் சரிவர நிகழ்த்த அரசும், அறங்காவலர்களும், ஆலய ஊழியர்களும், பொதுமக்களும் உரிய ஒத்துழைப்பு நல்கவேண்டும். திருக்கோயில் பணியாளர்களுக்கு எல்லா வகையிலும் உரிய பயிற்சிகள் நல்கவேண்டும். நிதிவசதிகளுக்கு ஏற்ப, திருக்கோயில்களை, வழிபட வருவோரை ஈர்க்கும் வகையில் பராமரிக்கவேண்டும். சேவார்த்திகளுக்கு, அடிப்படையான தங்குமிடம், தண்ணீர், சாலை போன்ற வசதிகளை வழங்குதல் இன்றியமையாதது. திருக்கோயில்களின் முகப்பில், அவ்வத்திருக்கோயில்களின் வரலாறு, குறிக்கத்தக்க சிறப்புக்கள், பெருமை முதலியன பற்றிப் பிராந்தியமொழி, மற்றும் ஆங்கிலத்தில் உரியவாறு எழுதி வைக்கவேண்டும். திருக்கோயில்கள் திருமடங்கள் நிதி உதவியுடன் தெய்வீகப் பேரவை, இதர இந்து சமய மன்றங்கள் இயங்க வழிவகை செய்ய வேண்டும்.

2. இந்து சமய வளர்ச்சிக்கு, திருக்கோயில்களும் இதர இந்து சமய நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.

அரசு இந்து சமய வளர்ச்சிக்கு என எவ்வித நிதி ஒதுக்கீடும் செய்ய மார்க்கம்இல்லாததால் நிகர வருவாயுள்ள சமய நிறுவனங்களின் வருவாய் அனைத்தும் சமய வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். நிகர வருவாய் உடைய கோவில்கள் சிலவே உள்ளன. நிகர வருவாய்உடைய கோவில் நிதிகளை, வசதியற்ற கோவில்களின் திருப்பணிகள் மற்றும் நித்திய பூஜை முதலியனவற்றிற்கே செலவிடப் படவேண்டும். சமுதாயப் பணிக்கு என அரசு உள்ளது. சமய நிறுவனங்களின் நிதிகளை அரசு சமுதாயப் பணிகள் என்ற பெயரில் மடைமாற்றுவதை நிறுத்தவேண்டும். மக்களைப்பக்தி மார்க்கத்தில் சட்டத்தை மதித்து நடக்கும் பண்பாளர்களாக மாற்றுவதே சமயத்தின் சமுதாயப் பணியாகும். சுற்றுலா மையங்களின் வளர்ச்சிக்கு பெரும் செலவுகளைச் செய்யும் அரசு, சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் தென்னகத் திருக்கோவில்களின் பராமரிப்பை சுற்றுலா முக்கியம் கருதி, பேணுதற்கு அரசை வற்புறுத்த வேண்டும். சமயச் சார்பு நூல்கள், சிறு நீதிநூல் வெளியீடுகள், வழிகாட்டிக் குறிப்புக்கள், போன்றவற்றை வசதியுடைய கோவில்கள் அச்சிட்டு வழங்க வேண்டும்.

3. இந்துக்களின் சமுதாய வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் திருக்கோவில்களும், இதர இந்து சமய நிறுவனங்களும் செயற்படுத்தக் கூடிய ஆக்கப் பணிகள்.

இந்துக்களை சமயநம்பிக்கை உடையவர்களாக்கி நல்ல பண்பட்ட குடிமக்களாக உருவாக்குவதே சமய நிறுவனங்களின் சிறந்த சமுதாயப் பணியாகும். வேறு வகையில் கல்வி, மருத்துவம், அனாதை இல்லம் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கக் கோவில்களில் நிதி இல்லை. நிகரவருவாயுடைய கோயில் நிதிகளைச் சமுதாயப்பணி என்ற பெயரில் செலவிட அரசு வற்புறுத்துகின்றது. அப்படியானால் வருவாயற்ற திருக்கோவில்களுக்கு வேறு கதி என்ன? எனவே, இதர திருக்கோயில் உபரிநிதி, முதற்கண், பிறகோயில்களின் வளர்ச்சிக்கே செலவிடப்பெற வேண்டும். அரசின் சட்டங்களால் உரிய வருவாய்களையும் பெற இயலாத ஒரு முட்டுக்கட்டை நிலை சமயநிலையங்

களுக்கும் பல ஆண்டுகளாக இருந்துவருகின்றது. இது உடனே நீக்கப்பட வேண்டும். உரிய வருவாய்க்கு அரசு உத்தரவாதம் வழங்கவேண்டும். எல்லா ஆலயங்களுக்கும் உரிய வருவாய் கிடைத்து அவற்றில் உபரி ஏற்படும்வரை சமுதாயப்பணி என்ற பெயரில், வருவாயுடைய ஒன்றிரண்டு கோயில் நிதிகளையும் மடை மாற்றல் கூடாது.

4. அறநிலையச் சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தை அதிகப்படுத்தக் கூடிய வழிவகைகள்.

கோவில்களுக்குச் சொத்துக்கள் தான் வருமானம் தந்து கொண்டிருந்தது. சமீப காலத்தில் சாகுபடிக்கு குத்தகைக்கு விட்டதில் வருமானம் வெகுவாக பாதிக்கப்பட்டு விட்டது. பெரும்பாலும் இவ்வாறுபாதிக்க அரசு சட்டங்கள் காரணமாகி விட்டன. வசூல் காலத்தில் வசூல் செய்ய முடியாமல் அரசின் அவசரச்சட்டங்கள் தடையாகி வருகின்றன.

அரசின் இச்சட்டங்களில் உள்ள இடுக்குகளால் குத்தகை தாரர்கள் குத்தகைசெலுத்தாமல் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். வசூல் விஷயமாக சில சட்டவிதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டும். இயற்கைக்கோளாறுஏற்படும் காலத்தில் குத்தகைக் காரர் ரெவின்யூகோர்ட் மூலம் தள்ளுபடி பெற முறை வகுக்கப் பட்டுள்ளது. அரசுஅதை அமுல்படுத்தவிடாமல் அவசரச் சட்டம் கொண்டுவந்து விடுகிறது. அதனால், வசூல்முறையே அமுலாக்க வழியில்லாமல் போய்விடுகிறது. அரசு குடிகளுக்கு உதவி செய்வதாகநினைத்து இயற்றும் சட்டங்கள் குடிகளுக்கும், அறநிலையங்களுக்கும் நல்லனவாக இல்லை. ஏற்கனவேஉள்ள சட்டவிதிகளின்படி குடிகள் பரிகாரம்பெற்றுக்கொள்ள விட்டு விட்டால் அவர்களுக்கும் நலலது; கோயில்களுக்கும் ஒரு அளவாவது வருவாய்கிடைக்கும். கணக்கும் அந்தந்தவருஷத்தில் நேராகும்.

மேலும், ஊராட்சி, நகராட்சிகளுக்கு வர வேண்டிய வாடகை, வரி முதலியவற்றை கமிஷனர் ஜப்தி முதலானது செய்து வசூலிப்பதைப் போல் அறநிலையங்களுக்கு வர வேண்டிய டிமாண்டு தொகைகளையும் வசூல் செய்யும் அதிகாரம் அறநிலையஇலாக்கா அதிகாரிகளிக்குச் சட்டபூர்வ மாக வகுத்துச் சட்டத்திருத்தம் செய்ய வேண்டும்.

வாசகர் கடிதம்

"சித்தாந்தசிகாமணி" கிருத்துவக் கல்லூரி சென்னை
க. வடிவேலாயுதம், எம். ஏ., 2—12—1981
தமிழ்த்துறைத் தலைவர்

* "ஞானசம்பந்தம்" இதழை தொடக்க நாளிலிருந்து அடியேன பெற்றுவருகின்றேன்.

'ஞானசம்பந்தம்' இதழுக்கு நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுவது மிகவும் பாராட்டத்தக்க நிகழ்ச்சியாகும். தமிழுக்கும் சைவசமயத்திற்கும் ஆற்றியபணி அளப்பரியது. என்னும் இன்வரும் காலத்தில் அதன்பணி மிகவும் இன்றியமையாத தாகும். ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் அருளால் இன்னும் பல்லாண்டு சிறப்பாகத் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றும் என உறுதியுடையேன்.

இவ்வாண்டுமுதல் நான் ஆயுள் சந்தாதார் ஆகின்றேன். அதற்குரிய காசோலை ரூ. 100/ (நூறுமட்டும்) இதோடு அனுப்பியுள்ளேன். பற்றுச் சீட்டு (ரசீது) அனுப்பவேண்டுகிறேன்.

எனக்குட்பின் எனதுஇளையபுதல்வன் செல்வன் வ. செந்தில் ஆறுமுகத்திற்கு இதழையனுப்பி உதவுமாறு வேண்டுகிறேன். அதே முகவரி இருக்கும். *

க. வடிவேலாயுதம்

★

G. S. முத்துசாமி, நரசிங்கன்பேட்டை 609 802
ஸ்ரீ ஷண்முகா பிரஸ், தஞ்சாவூர் ஜில்லா

* தங்கள் ஆதீனத்திலிருந்து வெளிவரும் 'ஞானசம்பந்தம்' இதழை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தொடர்ந்து வாங்கிவருகின்றோம். ஆரம்பத்தில் நான் படிக்கத் தயங்கியதுண்டு. ஆனல் தற்சமயம் வரும் இதழ்கள் அதிகமுக்கியத்துவம் வாய்ந்ததாகவும், படிக்கப் படிக்க ஆவலாகவும் உள்ளது.

மலர் 40 இதழில் முதல் இரண்டு தலைப்புகளுமே படிக்கப் படிக்கச் சுவையாக உள்ளன. மேலும் ஒரு முக்கிய வேண்டுகோள். கடந்த 25—11—81 தினமணி நாளேட்டில் வெளியான "அரசின் வாரக்கொள்கை கோயில்களை பாதித்துள்ளது" என்ற தங்களின் கருத்தை அவசியம் தங்கள் 'ஞானசம்பந்தத்தில்' அச்சிட உத்தரவு விடும்படி வேண்டுகிறேன். *

G. S. முத்துசாமி

கி. வா. ஜகந்நாதன்
—·——

" காந்தமலை "
2, நார்ட்டன் முதல் தெரு,
சென்னை–600 028.
2—7—1981

1 ஆர்சொன்னர் அருள்நெறியின் றேங்கவிலை
என்றன்றேர் அன்பிற் சென்று
பேர் சொன்னல் சிவம்மணக்கும் திருத்தருமை
மடாலயத்தின் பெருமை காண்க !
ஊர்சொல்லும் அதன்பெருமை ; சிவநெறியும் தமிழ்நயமும்
ஓங்கும், ஆங்கே
பார்சொல்லும் புகழ்சேர்சண் முகதேசி கப்பேர்கொள்
பண்பற் காண்மின்.

2 சடைமுடித்துக் கண்மணிகள் தரித்துச்செங்
கல்லாடை புனைந்து கண்ணின்
சடைவிரிக்கும் கருணைதவழ் தரவிளங்கும் முனிவரனைக்
கண்டீ ராகின்
புடையமைக்கும்உமையின்றித் தவக்கோலத்தொடுசிவனே
பொலிகின் றனென்
றடையுமதி சயத்தோடே கண்டுகண் இமையாமல்
அங்கே நிற்பீர்,

3 இவ்வாறு சொல்லுவதற் கேற்றபடி நடையில்நிமிர்
இயல்போய் ; யாரும்
செவ் வேநற் புகழ்சொல்லும் சண்முகதே சிகநாமம்
சிறக்கப் பெற்றேய் ;
அவ்வான வர்போற்றும் குமரகுரு பரமுனிவன்
அருளிச் செய்த
தெய்வாம்சக் கலிவெண்பா விளக்கமின்று நின்னுடைய
திருமுன் சாரும் ;

4 புல்லறிவேன் ஆசையினல் இதைஎழுதப் புகுந்தேன்; வேல்
பொருந்து கையோன்
நல்லபடி அருளியதனல் ஒருவாறு நிறைந்ததுகாண் ;
நாயேன் ஆசான்
சொல்லிவைத்த வழியிலிது செய்தேன் ; நின்திருமுன்னர்த்
துன்னச் செய்தேன் ;
நெல்லினிலே உமிநீக்கி அரிசிகொள்ளு தல்போல
நினைத்துக் கொள்க ;

5 தமிழ்மணக்கும் திருவாயும் தவம்மணக்கும் திருவுளமும் சன்மார்க் கத்தின்
அமிழ்தனைய திறம்மணக்கும் நல்லொழுக்கம் துறவறத்தின் அழகும் சான்று
கமழ்புகழ்சேர் தரத்தொண்டு புரிந்துவரும் நின்றமையால் கல்வி கற்றே
இமிழ்புனல்சூழ் வையத்தில் இருக்கின்ற ; தீதுண்மை ; என்றும் உண்மை.

6 தருமை மடாலயந் தான்வாழ்க அங்கே
அருமைபெறக் கோலோச்சும் அண்ணல் — பெருமைமிகு
சண்முக தேசிகனார் தாம்வாழ்க ; நன்னெறியே
மண்முகந்து வாழ்க வளர்ந்து.

அட்டைப்பட விளக்கம்

சிவபெருமான் அருவம், அருவுருவம், உருவம் ஆகியமூன்று வடிவங்களோடுவிளங்கி அருள்புரிபவர். அவர் கொண்டருளிய உருவத்திருமேனிகளில்தலையானதுநடராசமூர்த்தம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் களை இயற்றி உலக இயக்கத்திற்குத் தானே காரணமாக விளங் குபவர் என்பதைத் தெரிவிக்கும் இக்கடவுள் வடிவை வியந்து போற்றுதவர் இல்லை. கூத்துவகைகளில் மகளிர் ஆடுவதை காஸ்யம் என்றும், ஆடவர் ஆடுவதைத் தாண்டவம் என்றும் கூறுவர். ஐந்தெழுத்தையே தம்வடிவமாகக்கொண்டு இறைவன் ஆடும் இத்திருக்கூத்தைப் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் என்பர். நடராசப்பெருமானின் தாண்டவபேதங் கள் பலவாகும். பல திருக்கோயில்களிலும் இத்தாண்டவ பேதங்களைக்குறிக்கும் சிற்பவடிவங்கள் இருத்தலைக் காணலாம். உலகம் போற்றும் உயர்தனிக் கலையழகோடு விளங்கும் இத் திருவுருவம் மக்கள் உள்ளங்களைப் பெரிதும்கவர்ந்த வடிவ மாகும். நடராசப்பெருமானின் வலக்கையில் உள்ள உடுக்கை படைத்தலையும், அபயக்கை காத்தலையும், அனல்ஏந்தியகை அழித்தலையும், ஊன்றியதிருவடி மறைத்தலையும், தூக்கியதிருவடி அருளலையும் குறிக்கும். உலக இயக்கத்திற்குரியதாக இத்திரு நடனத்தைக் கருவறை ஊனநடனம் என்றும், தம்மைவழிபடும் அன்பர்களின் பாவங்களை அகற்றிச் சிவானந்தம் அருளும் நிலையினதாகக் கொள்ளுவதை ஞானநடனம் என்றும் கூறுவர், இப்பெருமான் திருக்கோயில்கள்தோறும் எழுந்தருளியிருந்து மார்கழித்திருவாதிரை நாளில் திருவீதி வலம் வருவார். அவரைச் சிறப்பாக வழிபடுதற்குரிய மார்கழித்திருவாதிரைநாள் 9—1—82 சனிக்கிழமை அன்று வருகிறது. அன்பர்கள் வழிபட்டு அருள் நலம் பெறுவார்களாக.

திருஇரும்பூளை, திருஅரதைப் பெரும்பாழி திருஅவளிவணல்லூர் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணத்தை அடுத்துள்ள இத்தலங்கள் சோழவளநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 98, 99, 100 வது தலங்களாகப் போற்றப்பெறுவன. சிவதலங்களில் பஞ்சாரண்யத் தலங்களாகத் திருக்கருகாவூரும், திருஅவளிவணல்லூரும், திருஅரதைப்பெரும்பாழியும், திருஆலங்குடியும், திருக்கொள்ளம்பூதூரும் கூறப்பெறும். இவற்றை முறையே ஒரேநாளில் உஷக்காலம், காலசந்தி, உச்சிக்காலம் சாயரக்ஷை அர்த்தயாமங்களில் வழிபடுவது சிறப்பு எனக் கூறுவதுண்டு. இவ்வைந்து தலங்களில் மூன்று தலச்சிறப்புக்களை இக்கட்டுரையில் காண்போம்.

1. திருஇரும்பூளை (ஆலங்குடி)

இத்தலம் ஆலங்குடி என வழங்குகிறது. நீடாமங்கலம் இரயில் நிலயத்துக்கு வடமேற்கே 6, கி, மீ, தூரத்திலுள்ளது. கும்பகோணம் மன்னார்குடி வழியில் செல்லும் பேருந்துகளில் செல்வோர் இத்தலத்தில் இறங்கலாம். கும்பகோணத்திலிருந்து டவுன்பஸ் வசதியும் உள்ளது.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் திருத்தலங்களில் 98 ஆவது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்திருப்பதிகம் ஒன்றைப் பெற்றது. தக்ஷிணாமூர்த்தி இத்தலத்தின் சிறப்புடைக் கடவுளாக விளங்குகிறார். வியாழக்கிழமை இம்மூர்த்தியை வழிபடுவோர் எல்லாநலங்களும் எய்திவருகின்றனர். விசுவாமித்திரர், முசுகுந்தர், வீரபத்திரர் பூசித்த தலம்.

தலப்பெயர் :

காசிஆரண்யம், திருஇரும்பூளை, ஆலங்குடி, என்றபெயர்கள் இத்தலத்துக்குரியன. பஞ்ச ஆரண்யங்களில் காசிஆரண்யம் என்றும், கருநிறமுள்ள பூளைச் செடியைத் தல விருக்ஷமாகக் கொண்டுள்ளதால் திருஇரும்பூளை என்றும், ஆலமரத்தின் கீழிருந்து அறமுரைத்தப் பெருமானுக்குரியத் தலமாதலாலும் (ஆலம் – விடம்.) திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது தோன்றிய ஆலத்தை உண்டு அமரர்களைக் காத்தருளிய இறைவன் வீற்றிருப்பதாலும் ஆலங்குடி என்ற பெயரையும் இத்தலம் பெற்றுள்ளது. காளமேகப்புலவர் ஆலங்குடியான் என்ற பெயரை வைத்து இத்தலத்து இறைவன் மீது பாடிய பின் வரும் வெண்பா படித்து இன்புறத்தக்கது.

ஆலங்குடியானை ஆலாலம்உண்டானை
ஆலங் குடியான்என்று ஆர்சொன்னர் — ஆலம்
குடியானே யாகில் குவலயத்தோர் எல்லாம்
மடியாரோ மண்மீதி னில்.

என்பதுதான் அப்பாடல். நாகதோஷமுள்ளவர் இத்தலத்திற்கு வந்து வழிபட்டுத் தோஷம் நீங்கப்பெறுகின்றனர். இவ்வூரில் விடந்தீண்டி யாரும் இறப்பதுஇல்லை என்பது சிறப்பு. கோயிலில் நாகர்க்குத் தனி மண்டபமும் அதில் ஏராளமான நாகப் பிரதிஷ்டைகளும் உள்ளன.

கோயிலமைப்பு :

கோயில் ஊரின் நடுவில் நாற்புறமும் அகழிகளால் சூழப்பட்டு அழகியதோற்றத்துடன் காட்சியளிக்கிறது. தெற்குத் திருவாயிலில் ஐந்துநிலை இராஜகோபும் உள்ளது. கோபுர வாயிலில் கலங்காமல் காத்தவிநாயகர்சன்னிதி அமைந்துள்ளது. அவரை வணங்கி உள்ளே நுழைந்தால் முதல் பிராகாரம் காணப் படுகிறது. அம்பாள் கோயில் தெற்குநோக்கியுள்ளது. இரண்டாவது வாயிலைக் கடந்ததும் உள்ளே தென்புறம் உள்ள கீழைத் திருமாளபத்தியில் சூரியன் சன்னிதி இருக்கிறது. தென் புறம் உற்சவ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய திருக்கோலத் துடன் அருள் பாலிக்கிறர். அடுத்தாற்போலத் தெற்குத் திரு மாளப்பத்தியில் (உள்பிரகாரத்தில்) நால்வர் திருவுருவமும், சூரியேசர், சோமேசர், குருமோசேசுரர், சோமநாதர், சப்தரிஷி நாதர், விஷ்ணுநாதர், பிர்மேசர்ஆகிய சப்தலிங்கங்களோடுகாசி

விசுவநாதர் விசாலாட்சி அகத்தியரும் உள்ளனர். மேலத் திருமாளப்பத்தியில் ஆக்ஞாகணபதி சோமாஸ்கந்தர், பெரும் திருவுருவத்துடன் கூடிய கலங்காமல் காத்த விநாயகர் நின்ற கணபதி, சந்திரசேகரர் சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானைபக்தர் சண்டேசுரர் கல்யாணசாஸ்தா ஸப்தமாதா முதலிய உற்சவர்களும் அடுத்து முருகன் இலக்குமி இருப்பிடமும், வடக்குத் திருமாளப்பத்தியில் நவக்கிரகம் சபாபதி, சிவகாமி அம்மை, சம்பந்தர், அப்பர், மணிவாசகர் முதலியோரும் காட்சிதருகிறார்கள். சபாநாதர் சன்னிதியில் திருமுறைக்கோயில் அமைந்துள்ளது. அடுத்து உற்சவ தட்சிணாமூர்த்தி சனகாதிநால்வருடன் காட்சிதருகிறார்.

தக்ஷிணாமூர்த்தி துதி :

கல்லாலின் புடையமர்ந்து
　　நான்மறை ஆறங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும்
　　வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய்
　　இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
　　நினைந்துபவத் தொடக்கைவெல்வாம்.

கீழ்திருமாளப்பத்தி வடபுறம் பைரவர் சந்திரன்சன்னிதிகள் உள்ளன. சுவாமி மகாமண்டபத்தில் நந்தி பலிபீடம் உள்ளது. மகாமண்டப வாயிலில் துவாரபாலகரும், கருவறையில் கிழக்கு நோக்கி. ஆபத்சகாயரும் அர்த்தமண்டபத்தில் பள்ளியறைச் சொக்கரும் போகசக்தி அம்மையும் உள்ளனர். தெற்கு கோஷ்டத்தில் கணபதியும் அடுத்து இத்தலத்து சிறப்பு மூர்த்தியாகிய குருதட்சிணாமூர்த்தி இருப்பிடமும் மேலக்கோஷ்டத்தில் லிங்கோத்பவரும் வடகோஷ்டத்தில் பிர்மா, துர்க்கை, சண்டேசுரரும் அடுத்து ஞானகூபம் என்னும் தீர்த்தக் கிணறும் உள்ளன. வெளியே சுக்கிரவார அம்மன்சன்னிதியும், பள்ளியறையும் உள்ளன. தெற்கு நோக்கிய அம்மன் சன்னிதி தனியான பிராகாரத்துடன் உள்ளது. துவாரசக்தி, செப்பு நந்தி பலிபீடமும் கீழ்ப்புறம் திருமாலைகட்டி மண்டபமும் மேற்கு நோக்கி சனீஸ்வரர் சன்னிதியும் துவஜகணபதி, கொடிமரம், நந்தி பலிபீடமும், வடபுறம் வசந்தமண்டபமும்,கீழ்ப்புறம்யாகசாலையும் பாகசாலையும் கீழத்திருவாயிலும் அடுத்து தென்புறம் வடக்குப்பார்த்த சப்தமாதா ஆலயமும் வடபுறம் திருநந்தவனமும்!உள்ளன.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர்கள் அருள்மிகு காசிஆரண்யேசுரர், ஆபத்சகாயர், அம்பிகை திருப்பெயர்கள். அருள்மிகு உமையம்மை ஏலவார்குழலி. விசேடமூர்த்தி அருள்மிகு குரு தட்சிணுமூர்த்தி. தீர்த்தங்கள் பிரமதீர்த்தம் முதலியன. தலமரம் பூளைச்செடி.

பரிவாரத்தலம் :

திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப்பெருமானுக்குரிய பரிவாரத்தலங்களில் தட்சிணுமூர்த்தித் தலம். ஏனைய தலங்கள் திருவலஞ்சுழி (விநாயகா) திருவேரகம் (முருகன்) திருவாவடுதுறை (நந்தி) சூரியனர்கோயில் (நவக்கிரகம்) திருவாப்பாடி (சண்டேசுரர்) சிதம்பரம் (நடராசர்) சீர்காழி (பைரவர்) திருவாரூர். (சோமாஸ்கந்தர்)

பஞ்ச ஆரண்யத் தலங்கள் :

திருக்கருகாவூர், திருஅவளிவள்நல்லூர், திருஅரதைப் பெரும்பாழி, திருஆலங்குடி, திருக்கொள்ளம்பூதூர்.

புராணவரலாறுகள் :

சுந்தரர் இத்தலத்திற்கு வரும்போது வெட்டாற்று வெள்ளப் பெருக்கில் ஆபத்சகாயரே ஓடக்காரராக வந்து கரையேற்றிக் காட்சிதந்தார் என்பது இத்தலத்தில் கூறப்படுகிறது. ஓடம் நிலைதடுமாறிப் பாறையில் மோதியபோது காத்தவிநாயகர் கலங்காமல் காத்த பிள்ளையார் என வழங்கப்படுகிருர்.

அம்பிகை இத்தலத்தில் தோன்றித்தவம்செய்து இறைவனைத் திருமணம் புரிந்துகொண்டார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப்பணியைப் பெற்றுள்ள இக்கோயில் தமிழ்நாடு இந்து அறநிலையத்துறையினரால் பரிபாலிக்கப்படுகிறது.

2. திருஅரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)

தஞ்சாவூர் - நாகூர் இரயில்பாதையில் கோயில் வெண்ணி புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கி. மீ. தூரம் உள்ளது.

கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய நகரங்களிலிருந்து இத்தலத்திற்குவர நகரப் பேருந்துகள் உள்ளன. இத்தலம் அரித்துவார மங்கலம் என்று வழங்கப்படுகிறது. ஊர்ப்பெயர் அரதை என மருவியும் கோயிற்பெயர் பெரும்பாழி எனவும் கொள்ளல் வேண்டும்.

இறைவன் திருமுன்பு திருமால் பன்றி வடிவம்கொண்டு பறித்த பள்ளம் இருக்கிறது. இக்காரணம் பற்றியே அரித்துவார மங்கலம் என்ற பெயர் வழங்குகிறது எனக் கூறுகின்றனர். இறைவன் அப்பன்றியின் கொம்புகளுள் ஒன்றை முறித்துத் தம்மார்பில் அணிந்துகொண்டார் என்பது வரலாறு காவிரித் தென்கரைத் தலங்களில் 99 ஆவது தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றது.

கோயிலமைப்பு :

பேருந்துச்சாலைக்கு வடக்கே கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய கோயில் சுவாமி அம்பாள் இருசந்நிதிகளும் கிழக்கு நோக்கி உள்ளன. அம்பிகை கோயில் சுவாமிகோயிலின் வலது பாகத்தில் அமைந்து திருமணம் கொண்ட கோலத்தைக் காட்டும் நிலையில் உள்ளன. கோயிலுக்கு இரண்டு வாயில்கள் உள்ளன. சுவாமி சந்நிதியில் மூன்றுநிலை இராஜகோபுரம் உள்ளது. கோபுரவாயிலைக்கடந்து கோயிலை வலம்வருவோம். அம்பாள் சந்நிதியில் பெரிய வன்னிமரம் உள்ளது.

கன்னிமூலையில் தல விநாயகர் விளங்குகிறார். மேற்குப் பிராகாரத்தில் விநாயகர் முருகன் மகாலக்ஷ்மி முதலியோர் எழுந்தருளும் மண்டபம் முற்றிலும் பழுதடைந்து மூர்த்திகள் கோயிலுக்குள் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் யாகசாலையை அடுத்து விநாயகர் விசுவநாதர் விசாலாக்ஷி மகாலிங்கம் விஷ்ணுலிங்கம் சனிபகவான் சமயாசாரியர் பைரவர் சப்தமாதர்கள் விளங்குகின்றனர். சுவாமி கோயில் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி மேற்கே இலிங்கோத்பவர் வடக்கே பிர்மா உள்ளனர். சுவாமி அம்பாள் கோயில்களுக்கு இடையே சோமாஸ்கந்தர் கோயில் உள்ளது.

சுவாமிகோயில் முன்மண்டபத்தில் நடராசர் தெற்குநோக்கி விளங்குகிறார். சுவாமி சந்நிதியின் வாயில்களில் விநாயகர் முருகன் விளங்குகின்றனர். அர்த்தமண்டபத்தில் நந்திதேவர் எழுந்தருளியுள்ளார்.

அருள்மிகு பாதாளேசுவரசுவாமி சந்நிதியில் திருமால் பன்றி யுருவோடு அகழ்ந்த பிலம் உள்ளது. மூடப்பட்டுள்ளது. சிவலிங்கபாணம் தனி அமைப்புடையது. தரிசித்து சோமாஸ்கந்தரை வழிப்பட்டு அம்பாள் கோயிலை அடைவோம். அம்பாள்கோயில் தஞ்சை பெரியண்ணு பஜனைமடத்தினரின் சலவைக்கல் திருப்பணியோடு அழகுறுத்தப்பெற்றுள்ளது. அம்மை கிழக்குநோக்கி விளங்குகிருர். கல்யாணகோலத்தில் சுவாமிக்கு வலதுபுறம் அம்மை எழுந்தருளியுள்ளார்.

திருப்பணி :

மிகவும் பழுதுபட்டுள்ள இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்ய வாளமர்கோட்டை தவத்திரு. காத்தையா சுவாமிகளைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ மூன்று லக்ஷரூபாய் ஆகலாம்என மதிப்பிடுகின்றனர். அன்பர்கள் இச்சிவாலயத் திருப்பணிக்கு உதவலாம்.

மூர்த்திகள் :

இறைவரின் திருப்பெயர் அருள்மிகு பாதாளவரதர். அம்மையின் திருப்பெயர் அருள்மிகு அலங்கார அம்மை. தீர்த்தம் அமிர்தபுஷ்கரிணி. தலமரம் வன்னி.

மூன்ருங்குலோத்துங்க சோழனின் 10 ஆம் ஆண்டுக் கல்வெட்டு சிதைந்த நிலையில் உள்ளது. இது அம்மன்னன் மதுரைகொண்ட செய்தியைக் குறிக்கிறது. இக்கோயில் தமிழ் நாடு இந்து அறநிலயத்துறையினரின் ஆட்சியில் உள்ளது.

3. திருஅவளிவணல்லூர்

இத்தலம் சாலிய மங்கலம் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 8. கி. மீ தூரத்தில் உள்ளது. கும்பகோணம் தஞ்சாவூர் ஆகிய நகரங்களிலிருந்து இத்தலத்திற்குவர டவுன் பஸ் வசதிகள் உள்ளன.

காவிரித் தென்கரைத் திருத்தலங்களில் நூருவது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டைப்பெற்றுள்ளதலம். பெருமான் இடபாருடராய் உமையம்மையோடு சிவலிங்கத்தின் பின்புறம் காட்சிதரும் சிறப்புடையது. சுவாமி சுயம்பு மூர்த்தி.

கோயிலமைப்பு :

பேருந்துச் சாலையை அடுத்து கிழக்கு நோக்கி உள்ளது கோயில். அண்மையில் திருப்பணிகள் செய்விக்கப் பெற்றுப் புதுப் பொலிவுடன் காட்சிதருகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்மை தெற்குநோக்கி விளங்குகிறார். எதிரே தீர்த்தம் உள்ளது.

கோயிலுக்குள் நுழைந்தவுடன் வெளிப்பிரகாரம். அம்பிகை கோயில் வெளிப்பிரகாரத்தில் உள்ளது. இறைவன் சந்நிதியில் முதலில் விநாயகரும் ஆட்கொண்டார் உய்யக்கொண்டார் ஆகிய துவாரபாலகரும் உள்ளனர்.

இரண்டாவது வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதற் பிரகாரம். கிழக்கே வலம்புரி இடம்புரி விநாயகர்கள், கண்ணுவர், சமயாசாரியர், பாலகணபதி ஆகியோர் உள்ளனர். தெற்கே சப்தமாதர்களும் தலப்பதிகக்கல்வெட்டும் தொடர்ந்து அறுபத்துமூவர் திருவுருவங்களும் உள்ளன. மேற்கே விநாயகர், சோமாஸ்கந்தர் முருகன் மகாலக்ஷ்மி ஆகியோர் உள்ளனர். வடக்கே நடராசர் விளங்குகிறார். கிழக்கே மகாலிங்கம் விசுவநாதர் விசாலாக்ஷி நவக்கிரகங்கள சுசீலதபசு அம்பாள் பைரவர் சூரியன் உள்ளனர். கோஷ்டங்களில் தெற்கே அகத்தியர் தக்ஷிணாமூர்த்தி மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே பிரமன் துர்க்கை உள்ளனர். சண்டேசுரர் தனிக்கோயிலில் உள்ளார்.

சுவாமி சந்நிதியில் துவாரவிநாயகரும் துவாரபாலகரும் உள்ளனர். சுவாமியின் பின்புறம் காட்சிகொடுக்கும் நிலையில் பெருமான் உமையம்மையோடு விளங்குகிறார். தரிசித்து வெளியில் வந்தால் அம்பிகை கோயில். அம்மை சௌந்தர நாயகி பெயருக்கு ஏற்ப அழகிய திருவுருவத்தோடு விளங்கு கிறார்.

புராணவரலாறு :

முற்காலத்தில் இத்தலத்து இறைவனைப் பூசித்து வந்த ஆதிசைவ அந்தணர் ஒருவர்க்கு இரண்டு பெண்கள் இருந் தனர். மூத்தபெண்ணை மணந்தவர் காசியாத்திரை சென்றார். சென்றபின் அப்பெண்ணுக்கு அம்மைவார்க்கப்பெற்று உருமாறிக் கண்ணிழந்திருந்தார். இடையில்ஆதிசைவர் இளைய பெண்ணை வேறொருவர்க்குத் திருமணம் முடித்திருந்தார். சில

ஆண்டுகள் கழித்துக் காசியாத்திரை சென்ற முத்த மருமகன் வீட்டுக்குவந்தார். முத்தபெண்ணின் தோற்ற வேறுபாட்டைக் கண்டு இவள் தன் மனைவியல்லள். இளையவளே என் மனைவி எனவாதிட்டார். ஆதிசைவர் மனங்கலங்கி இறைவனை பிரார்த்தித்தார். இறைவன் இடபாருடராய்த் தோன்றி மனம் தடுமாறிய அம்மருமகர்க்கு முத்தமகளே அவர் மனைவி என்னும் பொருளில் ' அவள் இவள் ' எனச்சுட்டிக் காட்டி மறைந்தார். இறைவனருளியவாறு உருமாறியிருந்த முத்தபெண் இத்தலத் தீர்த்தத்தில் முழ்கி உடல் வனப்பும் கண்ணொளியும் பெற்றுத் தன் கணவனைக்கூடி இன்புற்றார் என்பதுவரலாறு. இவ்வரலாறே அவளிவள்நல்லூர் என்ற இவ்வூருக்குரியபெயர்க் காரணமாகக் கூறப்படுகிறது.

புல்லாரண்யம், சாக்ஷிநாதபுரம், பாதிரிவனம், என்பன இத்தலத்தின் மறுபெயர்கள்.

அரதைப் பெரும்பாழியில் செருக்குக் கொண்டு நிலத்தைக் கீண்டிக் கொம்பிழந்த வராகமுர்த்தி இத்தலத்தில் தம் பிழை தீர இறைவனை வழிபட்டார். காசிபமுனிவர் முதலியோரும் வழிபட்டுள்ளனர்.

முர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு சாட்சிநாதர். தம்பரி சுடையார் எனத் தேவாரத்திலும் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்படுகிறார். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு சௌந்தர நாயகி. தீர்த்தம் சந்திரபுட்கரணி. தலமரம் பாதிரி. தை அமாவாசை சிறப்புவிழா நிகழ்கிறது.

கல்வெட்டுக்கள் :

முன்றும் இராஜராஜசோழன் மகன் முன்றும் இராசேந்திர சோழனின் (கி. பி. 1246 – 1279) கல்வெட்டுக்கள் உள்ளன, கல்வெட்டுக்களில் விநாயகர், முருகன், பெருமான், அம்பிகை, பள்ளியறை நாச்சியார், ஞானசம்பந்தர் திருவுருவங்களை எழுந்தருளுவித்த செய்தியும் சித்திரைத் திருநாள் மார்கழித் திருநாள் கொண்டாடப்பட்டசெய்தியும் கூறப்பட்டுள்ளது.

கட்டுரை எண். 22.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit,
D. P. P. A., D. U. N., I. U.

மங்கலை, செங்கலசம் முலையாள் மலையாள், வருணச்
சங்குஅலைச் செங்கைச் சகலகலாமயில், தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன்புடை ஆளுடையாள்,
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும்பெண்
[கொடியே! 21

அ. மங்கலை

(1) என்றும் சுமங்கலியாய் இருப்பவள்.

(2) 'சுமங்கலி' எனவும் 'சுவாஸினி' எனவும் சகஸ்ர நாமம் புகழும். கட்டுக்கழுத்தியாக உள்ளவளை சுமங்கலி என்கிறோம். 'சுவாஸினி' என்றால் 'நல்ல வாழ்வுடையவள்' என்று பொருள். என்றும் கணவனைப்பிரியாது இன்புற்றுவாழ்வதே பெண்களுக்கு நல்வாழ்வு. 'சுவாஸினி' என்னும் மங்கலவாழ்வு உடையாள்.

(3) மங்கலப் பொருள்கள் அத்தனைக்கும் அவளே மங்கலத்தன்மையினை, அருளுவதாலும், மங்கலத்தன்மையே. அவளது சாந்நித்யத்தின் அறிகுறி ஆனதாலும் அவள் மங்கலை 'சர்வமங்களா' என்பதும் அவளதுதிருநாமம்.

(4) சுமங்கலிப் பெண்களையே நவராத்திரி போன்ற காலங்களில் அம்பிகையாகக் கருதி, அவர்களை எழுந்தருளச்செய்து வழிபாடியற்றுவதும் தேவிஉபாசனையின் ஒருபகுதியாகும். எனவே மங்கலைகளான பெண்களின் வடிவில் இருப்பவள் ஆனதாலும் வழிபடப்படுவதாலும் அவள் மங்கலை.

(5) குடந்தையில் மங்களாம்பிகை என்ற பெயருடன் அவள் மந்திரபீடத்தின் மேல் திருக்கோயில்கொண்டு விளங்கு பவள்.

(6) 'மங்கலவாரம்' என்னும் செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கையாக வழிபடப்படுவதாலும் அவ்வாறு மங்கலவாரத்தில் வழிபட மங்கலம் அருள்வதாலும் அவள் மங்கலை.

(7) 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்ற திருக்குறளுக்கு ஏற்ப 'சதாசிவ பதிவிரதை' என்றபெயருக்கேற்ற மாட்சிமை யுடன் விளங்குவதாலும் அவள் மங்கலை.

ஆ. செங்கலசம் முலையாள்

(1) சிவந்த செப்புக்கலசம் போன்ற தன பாரத்தினை உடையவள்.

(2) இயற்கையாகவே சிவந்த திருமேனியுடையவள் அன்னை. அத்துடன், மங்கலை என்பதற்கேற்ப மார்பகத்தில் குங்குமக்கலவையினைப் பூசுகிருள். அறுபத்துநான்கு உபசாரங் களில் 'குங்கும தோயமும்' ஒன்று. அக்குங்கும தோயத்தால் மேலும் சிவந்த திருமுலைகள் உடையவளை 'செங்கலசம் முலையாள்' என்ருர். பர, அபர ஞானங்களே திருமுலைகள் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இ. மலையாள்

(1) மலையரசனின் பெண்ணுகத் தோன்றியவள்.

(2) 'பர்வதம்' என்ருல் மலை. மலைமகளாகத்தோன்றிய தால் அவளுக்குப் 'பார்வதி' என்றபெயர் வழங்கலாயிற்று. மலையாள் என்ற பொருளையுடைய 'பார்வதி' என்ற நாமமும் சகஸ்ரநாமத்தில் உண்டு.

(3) 'மலையாசல வாசினி' – மலயாசலத்தில் வசிப்பவள் என்ற 'நாமா' அவள் மலைப்பிரதேசமாகிய கேரளத்தில் பகவதி யாகக் கோயில்கொண்ட சிறப்பினைக் குறிக்கும்.

(4) பொதியமலையினைத் தனது கொடியில் பதித்த மலையத் துவச பாண்டியன் மகளாக வந்ததாலும் அவள் மலையாள்.

(5) 'மலை' என்பது சைவ உலகில் கைலைமலையினையே குறிக்கும். சிவபெருமானுடன் என்றும் கைலையில் உறைபவள் ஆதலால் அவள் மலையாள்.

(6) சாக்தஉலகில் 'மலை' என்பது மேருஎன்னும் 'பிம்ப'மே யாகும். ஸ்ரீசக்கரத்தின் விக்ரஹ வடிவமாகிய மஹாமேருவில் எழுந்தருளுவதால் அவள் மலையாள்.

"சுமேரு மத்ய ச்ருங்கஸ்த்தா" – "மேருவின் நடுச்சிகரத்தில் உறைபவள்" என சகஸ்ரநாமம் குறிப்பிடும்.

அதனையே 'சுமேரு மத்ய பீடவாஸிநி' என சங்கீதமூர்த்தி ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளும் தனது புகழ்வாய்ந்த "ஹிமாத்ரி சுதே!" என்ற கிருதியில் எடுத்தாளுகிறார்.

(7) பூரணகிரி போன்ற சக்திபீடங்களில் மலையின் வடிவிலேயே அவள் வழிபடப்படுவதாலும் மலையாள்.

(8) செங்கலசம் முலையாகவுடைய பெண்வடிவினள் என்றாலும் அவள் அசுர சக்திகளைக் கண்டு (பண்டாசுரன், மகிடாசுரன் போன்றவர்களைக் கண்டு சிறிதும் அயராதவள் அல்லது மலைக்காதவள். அரியது என்று எதனைக்கண்டும் 'மலையாள்' அவள்.

ஈ. வருணச் சங்குஅலை செங்கைச் சகலகலாமயில்

(1) கடலில் தோன்றிய சங்கினாலாகிய வளையல்களை அணிந்தவளும், எல்லாக் கலைவடிவானவளும், மயில்போன்ற சாயல் உடையவளும் ஆவாள்.

(2) 'வருணம்' என்ற சொல்லுக்கு 'நிறம்', 'சலதி', 'நீர்' ஆகிய பொருள்கள்உண்டு. நல்லநிறமுடைய அல்லது உயர்ந்த வகையினைச் சேர்ந்த அல்லது குளிர்ச்சிபொருந்திய சங்குவளையல்கள் அணிந்தவள் என்பது பொருள். வருணபகவானால் காணிக்கையாக அளிக்கப்பட்ட சங்குகளால் ஆன வளையல் அணிந்தவள் எனவும் கொள்ளலாம்.

(3) பெண்களின் மங்கல அணிகளில் வளையலும் ஒன்று. மங்கலை என்று குறித்தவர் அவளது மங்கல ஆபரணமாகிய சங்குவளையல்களையும் குறிப்பிட்டார். அச்சங்கு வளையல்கள் கையில் அங்குமிங்கும் அசைந்து ஒலி எழுப்பிக்கொண்டேயிருக்கும். எனவே சங்குஅலை (அலைகின்ற) செங்கை என்றார்.

(4) அலங்காரமாய்ச் சங்குவளையல் அணிந்த அவளது கைகள் அத்துடன் நிற்கவில்லை. அருட்கொடையினை அள்ளிக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. ஆகவே 'சங்குஅலைச் செங்கை' என்றார்.

(5) மயில்போன்ற சாயலினையுடைய அவள் அனைத்துக் கலைகளுக்கும் தலைவியானவள். 'கலாவதி' எனவும் 'சதுசஷ்டி கலாமயி' – அறுபத்துநான்கு கலைமயமானவள் எனவும் நாமங்கள் உண்டு.

(6) 'கலா' அல்லது 'கலாபம்' என்பது மயிலின் தோகையினைக் குறிக்கும். அம்பிகையாகிய இம்மயில் சகலகலைகளையும் தனக்குத் தோகையாகக்கொண்ட மயிலாவாள்.

(7) அறுபத்துநான்கு கலைகளுக்கும் அதிதேவதையான கலைமகளாகவும் இருப்பவள் அபிராமியே. 'சரஸ்வதி' – 'சாஸ்த்ரமயி' என்றநாமங்கள் அவளே கலைமகள்என்பதனைக் குறிப்பதாகும். அறுபத்துநான்குகலைகள் பற்றிய விளக்கம் பிறிதொரு பாடலின் ஆராய்ச்சியுரையில் காண்போம்.

(8) 'கலா' என்ற சொல் 'கூறு' அல்லது 'பகுதி' எனவும் பொருள்படும். இவ்வாறு பலவகையான கூறுகளின் வடிவாகவும் இருப்பவள் அம்பிகை. 'கலாத்மிகா' – கலைகளாக அல்லது கூறுகளாக இருப்பவள் என இன்னொரு நாமமும் உண்டு.

அக்னியின் கலைகள்	10	ஈச்வர கலைகள்	4
சூரியனின் கலைகள்	12	சதாசிவ கலைகள்	16
சந்திரனின் கலைகள்	16	ஜாக்ரத் கலைகள்	4
பிரும்ம கலைகள்	10	ஸ்வப்ந கலைகள்	4
விஷ்ணு கலைகள்	10	ஸுஷுப்தி கலைகள்	4
ருத்ர கலைகள்	10	துரிய கலைகள்	4

இவைபோன்ற அனைத்துக் கலைகளின் வடிவானவள் அம்பிகை. இக்கலைகள் பற்றிய மேல்விவரங்கள் சகஸ்ரநாம உரையினைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அவற்றினையெல்லாம் அறியும்பொழுது நமது முன்னோர்களின் விஞ்ஞான ரீதியான நுண்மாண் நுழை புலத்தினைக்கண்டு அதிசயிப்போம்.

உ. தாவுகங்கை பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடை ஆளுடையாள்

(1) பொங்கி எழுந்து தாவிப்பாய்கின்ற கங்கையின் அலைகள் ஒடுங்கித்தங்கிய முறுக்குண்ட சடையினையுடைய சிவபெருமானது இடப்பாகத்தைத் தனக்கே உரியதாக ஆட் கொண்டவள் அபிராமி.

(2) ஆணவத்துடன் உலகனைத்தையும் அழிக்கும் வேகத் துடன் பொங்கித் தாவிவந்த கங்கையாற்றின் பெருக்கினை பகீரதனின் வேண்டுகோளுக்கு இணங்கி இறைவன் தனது சடையில் அடக்கினான் என்பது புராணவரலாறு. செருக்கினை ஒடுக்கியதும். அடியவனுக்கு அருளியதும் இக்கதையின் நீதியாகும்.

அனால் அதே இறைவன் மலையாளை, மங்கலையை, மாத்தவம் செய்து ஏத்தியவளை இடப்பாகத்தில் என்றும் இருந்து ஆட்சி செய்ய அருட்செய்தான்.

(3) ' புரிசடையோன் புடையாள் ' எனவும் ' உடையாள் ' எனவும் பிரித்தும் பொருள் கொள்ளலாம். முறுக்கிய சடையா னின் புடை (பக்கத்தில்) வீற்றிருப்பவளே என்னை ஆளுடை யவள் அல்லது அனைத்தையும் தனக்கு உரிமையாக உடையவள்.

ஊ. பிங்கலை

(1) பொன்னிறமுடையாள்.

(2) அன்னையினையே யோகத்தின் இலக்காகக் கருதி யோகம்புரியும் யோகிக்கு, தன்னைத் தானே காட்டியருள்கிறாள். அவ்வாறு யோகத்தினைக் கூட்டுவிக்கும் இணைப்புப்பாலமாக அம்பிகை தானே எழுந்தருளுகிறாள். அப்போது அவள் ' யோகினி ' எனப் பெயர்பெறுகிறாள்.

ஸ்வாதிஷ்டானத் தாமரையில் அவள் அவ்வாறு யோகினி யாக வரும் பொழுது ' காகினி ' எனப் பெயர்பெறுவாள்.

கொழுப்புத் தாதுவிற்கு அதிதேவதையாய் நான்கு முகங்க ளுடன் சூலம் முதலிய ஆயுதங்களுடன் காட்சிதரும் இந்த காகினி யோகினியின் நிறம் ' பொன்னிறம் ' ஆகும்.

' பீதவர்ணு ' என சகஸ்ரநாமம் கூறும். தயிர் அன்னத்தை நிவேதனமாக்க் கொள்பவள் இவள்.

கொழுப்புத்தாதுவிற்கு அதிதேவதையான பிங்கலே கொழுப்புச் சத்து அதிகமுள்ள தயிரில் பிரியமுள்ளவள் என்பது குறிப்பிடத்தக்கது.

(3) பிங்கலே என்பவள் பொன்னிறமுடைய 'காமாட்சி' என்றும் கூறுவர்.

(4) தனலாபத்தை விரும்பி வழிபடுவோர் அன்னையினைப் பிங்கல நிறம் (பொன்னிறம்) உடையவளாகத் தியானிக்க வேண்டுமென லலிதோபாக்யானம் விளக்குகிறது.

எ. நீலி

(1) நீல நிறத்தையுடையவள் அல்லது அந்நிறமுடைய காளிதேவியாக இருப்பவள்.

(2) புகையின் நீலத்தையொத்த நிறமுடைய 'ஸாகினி' மூலாதாரத்தில் அங்குசம் முதலான ஆயுதங்களுடன் எழுந்தருளுகிருள்.

எலும்பிற்கு அதிதேவதையான இவள் அதன் வளர்ச்சிக்கேற்ற பயறுகலந்த பொங்கலில் விருப்பமுள்ளவள்.

(3) நா வன்மையினை விரும்பி வழிபடும்பொழுது அன்னையினை நீல நிறத்துடன் தியானிக்கவேண்டும். (லலிதோபாக்யானத்தின் படி)

ஏ. செய்யாள்

(1) சிவந்த நிறமுள்ளவள் அல்லது திருமகள்.

(2) மணிபூரகத்தில் எழுந்தருளும் 'லாகினி' மூன்று முகங்களும் 'வஜ்ரம்' முதலான ஆயுதங்களும் கொண்டவள்.

'ரக்தவர்ணு' – செந்நிறமுடையவள் என சகஸ்ரநாமம் புகழும். மாமிசத்தாதுவிற்கு அதிதேவதையான லாகினிவிரும்பும் நிவேதனம் 'குடான்னம்' என்னும் வெல்லப்பொங்கல்.

விசுத்தியில் இருக்கும் 'டாகினியும்' சிறிதுசிவந்த (பாதிரிப் பூவின் சிவப்பு) நிறமுடையவள். இவளுக்கு முகம் ஒன்று. தோலுக்கு அதிதேவதை. நிவேதனம் :- பாலில் வேகவைத்த அன்னம் (பாயஸான்னம்).

(3) செய்யாள் என்பது இலலிதாம்பிகையினைக் குறிக்கும் எனவும் கூறுவர்.

(4) வசீகரணத்தை விரும்பி வழிபடுவோர் அன்னையினை இரத்தச்சிவப்பாகத் தியானிக்கவேண்டுமென்கிறது லலிதோபாக்யானம்.

ஐ. வெளியாள்

(1) வெண்ணிறமுடையவள் அல்லது கலைமகளாகவும் இருப்பவள்.

(2) ஆஞ்ஞா சக்கரத்தில் ஆறுமுகங்களுடன் 'மஜ்ஜை' (எலும்பின் உள்ளே உள்ள சத்து) என்னும் தாதுவிற்கு அபிமான தேவியாய் வீற்றிருக்கும் 'ஹாகினி' என்பவள் வெண்ணிறமுடையவள்.

'சுக்லவர்ணு' – 'வெண்ணிறம் உடையவள்' என்கிறது சகஸ்ரநாமம்.

நிவேதனம் :- மஞ்சள்பொங்கல் (ஹரித்ரான்னம்).

(3) முத்தியினை விரும்புவோர் சந்திரவொளி போன்ற வெண்ணிறமாகவும், கவிபாடும் ஆற்றலை விரும்புவோர் ஸ்படிகம் போன்றவெண்ணிறமாகவும் இவளைத்தியானிக்கவேண்டும் – லலிதோபாக்யானம்.

"படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் — துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்
கல்லும் சொல்லாதோ கவி"

கம்பனின் சரசுவதியந்தாதி காப்புச் செய்யுளான மேற்கண்டபாடல் அதனை வலியுறுத்துவதுபோல் அமைந்திருக்கிறது.

ஓ. பசும் பெண்கொடியே

(1) பச்சை நிறமுடைய பெண் கொடிபோன்றவளும் அபிராமியே.

(2) பசும்பெண்கொடியே மங்கலை, செங்கலசமுலையாள் பிங்கலை நீலி செய்யாள், வெளியாள் எனவும் கொள்வர். கட்டளைக்கலித்துறைப்பாடல் ஏகாரத்துடன் முடியவேண்டுமென்ற இலக்கணவிதியின்படி பசும் பெண் கொடியுடன் ஏகாரம் சேர்த்து கொடியே என்ருர் எனினும் ஆம்.

(3) அநாஹதத்தில் இரண்டு முகங்களுடன் அட்சமாலை முதலியன தாங்கி உதிரத்துக்கு அதிதேவதையான 'ராகினி' என்பவள் பசுமைகலந்த கருநிறத்துடன் எழுந்தருளுகிருள்.

'ச்யாமாபா' – சியாமளநிறம் உடையவள் என்கிறது சகஸ்ரநாமம்.

'நெய்ப்பு' மிகுந்த நிவேதனம் கொள்பவள்.

(4) மரகதப்பச்சைநிறமுடைய மீனுட்சி அல்லது மாதங்கி தான் பசும்பெண்கொடி எனவும் கூறுவர்.

'மாதா மரகதச்யாமா மாதங்கி மதசாலினி' எனக் காளிதாஸனின் சியாமளாதண்டகம் துவங்குகிறது.

(5) விவசாய வளர்ச்சியும் நாட்டுவளமும் கருதி வழிபடுவோர் அன்னையினைப் பச்சைநிறத்துடன் தியானிக்கவும்.

பாராயண பலன் :- ஊ – 4, எ – 3, ஏ – 4, ஐ – 3, ஒ – 5 ஆகிய விளக்கங்களில் குறிப்பிட்டபடி கிட்டும்.

ஞானசம்பந்தம்! நல்வாழ்த்து!

திரு. அரங்க. முத்துமணி

மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) தஞ்சாவூர் 613 001

சீராரும் திருத்தருமை யாதீனம் சைவமுடன்
செந்தமிழ்க்கும்
ஏராளம் செய்கின்ற இணையற்ற தொண்டெல்லாம்
எண்ணிப் பார்த்துப்
பாராட்டிப் போற்றுகிறேன்; பட்டத்தில் இந்நாளில்
பாரே போற்ற
வாராது வந்திட்ட சண்முகப்பேர் மாமணியை
வணங்குகின்றேன்.

கனிவார்ந்த தங்களுடைக் கருணையினுல் சைவத்தின்
கனிகள்யாவும்
இனிதாகத் தந்திட்ட "ஞானசம்பந் த"மென்னும்நல்
ஏடுதானும்
நனிபோற்ற நாற்பதனைக் கடந்தின்று மகிழ்ச்சியுடன்
நாற்பத்தொன்றில்,
தனிநடைபோட்டுலவிவரும்தன்மையினைக்காண்கின்றேன்
தழைத்து வாழி!

திருப்புகழில் - வேண்டுகோள்கள்

தருமையாதீனப்புலவர், செஞ்சொற் கொண்டல், தமிழாகரர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

(தமிழ்ப்பேராசிரியர். அ. வ. அ. கல்லூரி, மாயூரம்)

அருணகிரிநாதர் முருகப்பெருமானின் அரியதிருப்புகழ்களை யெல்லாம் அற்புதமான சந்தப்பாக்களாக வடித்துள்ளார்; முருகன், அடியார்கள் இடரைக் களைவோன் என்பதனை எண்ணற்ற இடங்களில் குறிப்பிடுகின்றார்; வேண்டுவது இறைவன் திருவடிப்பேறென்றே என்பதனைத் தெளிவாக்கி யுள்ளார்; இனிய இசை கலந்த இந்த அற்புத விருந்தை முருகனடியார்கள் நாளும் துய்த்து வருகின்றார்கள்.

"அறிவால் அறிந்து உன் இருதாளில்
இறைஞ்சும் அடியார் இடைஞ்சல்
களைவோனே" (15)

முருகனை ஞானத்தின் வழியே அறியவேண்டும் என்பதும், அதுவும் ஒருவழிபாடு என்பதும், இங்குக்குறிப்பாக உணர்த்தப் படுகின்றன.

முருகப் பெருமானை வழிபடுவதற்கும் அவன் திருவருளே வேண்டும்; "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பது மணிமொழியன்றோ? திருச்செந்தூர்த் திருப்புகழிலே இதனைத் தெளிவாக்குகின்றார் அருணகிரிநாதர்:

"வரியார் கருங்கண் மடமாதர்
மகவாசை தொந்தம் அதுவாகி
இருபோது நைந்து மெலியாதே
இருதாளின் அன்பு தருவாயே" (18)

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின், "திருப்புகழ்த் திரட்டு" பதிப்பில் உள்ள எண்கள் இக்கட்டுரையின்கண் பயன் படுத்தப்பட்டுள்ளன.

"இயலிசையில் உசிதவஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனதுசிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனதுளறியும் அன்பைத் தருவாயே" (17)

அவன் அந்த அன்பைத் தராவிடில் அது பெறுதற்கரியது என்ற உண்மையைத் திருப்புகழ்ப் பாக்கள் பல் வேறிடங்களில் தெளிவுறுத்தும்.

திருவாவினன்குடித் திருப்புகழில் இதனை உணர்த்துவார்:

"கனக மருவும் இருபாதம்
கருத அருளி எனதுதனிமை
கழிய அறிவு தரவேணும்" (40)

உன்னுடைய திருவடிகளைத் தியானிக்கின்ற பேறும், அதனை அறியும் அறிவும் நீயே தரவேண்டும் என்று வேண்டுகின்றார் அடிகள்.

இம்மை மறுமை நலங்களை இறைவன் அருளவேண்டும் என்று விண்ணப்பிக்கும் வேண்டுகோள்களும் திருப்புகழில் உள்ளன; எடுத்துக்காட்டாக இரண்டொன்றைக் காட்டுவது பொருந்தும்:

"வசன மிக வேற்றி மறவாதே,
மனது துயராற்றில் உழலாதே
இசை பயில் சடாட்சரமதாலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே!
பசுபதி சிவாக்யம் உணர்வோனே!
பழனிமலை வீற்ற ருளும்வேலா!
அசுரர் கிளைவாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே!" (47)

"வந்த சரணார விந்த மதுபாட
வண்டமிழ் விநோத மருள்வாயே!" (174)

பிரணவத் திருமந்திரத்தில் ஊறிநிற்கும் ஞான அனுபவத்தை அருளவேண்டும் என்று உருகிவேண்டும் இடங்களும் உள:

"காமியத் தழுந்தி இளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தில் அன்பு மிகவூறி
ஓவியத்திலந்தம் அருள்வாயே" (65)

" நாள்போய் விடாமல் ஆறுருமீதில்
ஞானுேபதேசம் அருள்வாயே " (95)

" உபதேச குருபர
சம்ப்ரதாயமொடேயு நெறியது பெறுவேனே " (96)

" நானென்ப தற்று உயிரொடு ஊனென்பதற்று
வெளிநாதம் பரம்பிரம ஒளிமீதே
ஞானம்சுரப்பமகிழ் ஆனந்த சித்தியொடே
நாளும் களிக்கபதம் அருள்வாயே " (109)

" சீவனெடுக்கம் பூதவொடுக்கம்
தேறவுதிக்கும் பரஞான
தீபவிளக்கம் காணஎனக்குன்
சீதளபத்மம் தருவாயே " (121)

" ஒளிர்வேத கற்பகந லிளையோனே !
ஒளிர்மாமறைத் தொகுதி சுரர்பார்துதித்தருள
உபதேசிகப்பதமும் அருள்வாயே " (221)

" நாளுமிகுந்த கசிவாகி
ஞானநிருத்த மதை நாடும்
ஏழை தனக்கும் அநுபூதி
ராசிதழைக்க அருள்வாயே " (224)

ஒப்பற்ற பக்தி தமக்கு வேண்டும் என்று கசிந்துருகும் பல பாக்கள் ஓத ஓத உள்ளம் உருக்கும் தன்மை உடையவை.

" எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாள்நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே " (84)

என்று கதிர்காமத்தில் வேண்டுவார்.

" பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனுமா றெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே ". (87)

என்று இரத்னகிரி எனப்படும் வாட்போக்கியிலே வேண்டுவார். யானை உண்ட விளாம்பழம்போல, உடலைக் கொண்டு, பக்தியில் ஊறி வாழும் நிலைவேண்டும் என்பார் காசித்திருப்புகழில்:

“ வேழமுண்ட விளாங்கனி யதுபோல
மேனிகொண்டு வியாபக மயலூறி
நாளுமிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நானுநைந்து விடாதருள் புரிவாயே ” (149)

“ விரகற நோக்கியும், உருகியும், வாழ்த்தியும்,
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவும் இராப்பகல் பிறிதுபராக்கற
விழைவு குராப்புனையும் குமார
முருகசடாட்சர ! சரவண ! கார்த்திகை
முலைநுகர் பார்த்திப ! என்றுபாடி
மொழிகுழருத் தொழு தழுதழுதாட்பட
முழுதுமலாப் பொருள் தந்திடாயோ ” (190)

என்றபகுதி பக்தி நிலைகளை இனிது விளக்குதல் காணலாம்.

மயில்மீது வள்ளிதெய்வயானை புடைசூழ வரவேண்டும் பெருமானே என்று உருகிவேண்டும் பகுதிகள் எண்ணற்றவை.

“ வசை மாமியாரராட மலரிடவேதனுராட
மயிலுமாடி நீயாடி வரவேணும் ” (194)

“ அருள தருளி எனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும் ” (48)

“ மருவி யின்றெனக்கு மரகதம்சிறக்கு
மயிலில்வந்து முத்தி தரவேணும் ” (74)

“ பழைய அடியவ ருடனிமையவர்கணம்
இருவுடையு மிருதமிழ்கொடு மறைகொடு

பரவவருமதில் அருணையில் ஒருவிசை
வரவேணும் ” (104)

“ இருநிலமீதில் எளியனும் வாழ
எனதுமுனோடி வரவேணும் ” (114)

“ மயிலேறி
அடியனிருவினை நீறுபட அமரர்இது பூசை
அதிசயமெனருள் பாடவரவேணும் ” (321)

முதலிய பல்வேறு பகுதிகள் இத்தகைய வேண்டுகோள்களைத் தாங்கி நிற்கின்றன.

ஞானவாழ்வு வேண்டும் என்று மதுரையில் அடிகளார் உருகிவேண்டினர் :

" கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே " (161)

சித்திர ஞானபாதம் அருளவேண்டும் என்று புள்ளிருக்கு வேளூரில் தொழுதார் :

" சித்தினிலாடலோடு முத்தமிழ்வாணரோது
சித்திரஞானபாதம் அருள்வாயே " (177)

தமக்குத் தீட்சை தரவேண்டும் என்று உருகியதும் உண்டு:

" அறிவிலேனை நெறிநிற்க நீ தீட்சை
தரவேணும் " (181)

தீட்சை முதலிய கிரியா மார்க்கங்களில், ஏனைய பக்தி, ஞான, யோக மார்க்கங்களைப் போன்றே அடிகளாருக்கு ஈடுபாடுண்டென்பதனை இது காட்டும்.

தீட்சையை விழைந்த அடிகளார், திருவிளக்கிட்டுத் திருமுருகனை வழிபட்டுப் பூசிக்க விழையும் இடமும் இதனை இனிது உணர்த்தும் :

" விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே " (193)

இவ்வாறு திருப்புகழ் முழுவதும் அருணகிரிநாதரின் வேண்டுகோள்கள் விரவியுள்ளன. அவை அனைத்தும், அவற்றை ஓதுவோர்க்கும் உருகி விண்ணப்பிக்க ஏற்றவையாக உள்ளன.

" வாழினும் வறுமை கூரினும் நினது
வார்கழல் இணைகள் மறவேனே " (219)

என்ற உறுதிப்பாடுடைய அடிகளாரது திருப்புகழ் வேண்டுகோள்கள், உறுதியானவை; தெளிவானவை; பாடும்அடியர்க்கு மெய்யான பயன் விளைக்கும் திட்பநுட்பம் உடையவை.

நாவரசரின் நகைச்சுவை[1]

'திருத்தொண்டர்'

வித்துவான் திரு. ந. சண்முகசுந்தர தேசிகர்

திருவதிகை.

அல்லியம் பூம்பழனத்து திருவாமூர் நாவரசர், தமக்குச் செந்நெறிகாட்டிய செம்மலாம், முப்புரமெரி செய்த விரிசடைக் கடவுளாம் வீரட்டப் பெருமானின் செஞ்சடைக்கற்றை முற்றத்து இள நிலா எறிக்கும் எழிலுடைக் காட்சியைக் கண்டார். தந்நலம் கருதாது பிறர்நலம் காண்பது சான்றோர் இயல்பு அல்லவா! அவ் வியல்பை நகைச்சுவையுடன் கூறும் தன்மையைக் காண்போம்.

பச்சிளங் குழவியாம் திங்கள் இமையவரேத்த அழகொடு முடித்த அருமைத் தாயினும், ஆற்றின் அலையில் கிடந்து அலை கின்றதே என்ற அச்சம் அப்பருக்கு உண்டாகியது. சடையை வளைத்தெழும் கங்கை முளைக்கதிரிளம் பிறையை மூழ்கச் செய்யுமோ என்று வருந்தினர். ஆறிட்ட சடைமுடியில் கீறிட்ட திங்களைச் சூடினரே என்று உருகினர். நீர்த்திரையிலே பசலைக் குழந்தையைத் தவழவிடுவது தீமையாக முடியுமன்றோ. அலை கிளம்பியெழுந்தால் பிறைச்சந்திரனை அமுக்கி விடுமே! அது மட்டுமல்ல.

சடையிலணிந்த கொன்றை மலரிலிருந்து தேன் பெருகிக் கரையெல்லாம் புரண்டுஓடுகிறது. அதனல், அங்குவழவழப்பாக இருக்கும். தேனிலே கால்பட்டுக் கூனல் குழந்தைத் தவறி விட்டால் அலை இழுத்துச் சென்றிடுமே என்றும் இரங்கினர். இரக்கம் கருணையாக மாறியது. திங்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். யார் காப்பாற்ற வல்லார்? அதனைக் கங்கைக் கரையில் விளையாட விட்ட இறைவனிடத்தில்தான் முறையிடவேண்டும்.

தமக்கையாம் திலகவதியாரின் வேண்டுகோளுக்கிரங்கித் தன்மீது இரக்கம் கொண்டு செந்நெறிப்படுத்தியவர் இறைவன் அல்லவா! எனவே, தன் வேண்டுகோளுக்குக் கிணங்கி முற்றுத பால் மதியையும் காப்பாற்றுவார் எனத்திருவுளங்கொண்டு அதிகை வீரட்டப் பெருமானிடத்து நகைச்சுவைத் தோன்ற விண்ணப்பிக்கின்ருர்.

அப்பாடல் வருமாறு :-

“மீனுடைத் தண்புனல் வீரட்டரே நும்மை வேண்டுகின்றது
யானுடைச் சில்குறை யொன்றுளதால்நறுந் தண்ணெருக்கின்
தேனுடைக் கொன்றைச் சடையுடைக் கங்கைத் திரை தவழும்
கூனுடைத் திங்கட் குழவியெப் போதுங் குறிக்கொண்மினே”

என்று பாடினர். அதைக்கேட்டு தலைமீதிருக்கும் தலை நகுதலைச் செய்தது. பித்தன் தலையிலிருக்கும் தலைக்கும் பித்தேறி விட்டதோ ? இல்லை, இல்லை.

அங்கோர் பாம்பு சடைமிசை யேறிக்கொண்டிருந்தது அதைக்கண்டு கங்கை என்னும் நங்கை நடுங்கிக்கொண்டு நிற்கின்ருள். பாம்பென்ருல் படையும் நடுங்குமல்லவா ! பெண் பேதுறுவது இயல்புதானே. ஆனல், பிறையும் கிடந்து தவிக் கின்றதே ! பாம்புக்குப் பிறை இரையல்லவா ! பிறை ஏங்கித் துடிப்பதைக் கண்டார் அப்பரடிகள். பிறை தொலைந்தே போகுமென்று எண்ணினர். நல்லவேளையாக மூர்க்கப் பாம்பு கங்கை நங்கையைப் பார்க்கவும் அவளை மயிலெனக் கொண்டு மருண்டு விட்டது. மயிலின்சாயலை மங்கையின் சாயலுக்கு உவமை கூறுவது கவிமரபு. யானையை விழுங்கும் பாம்பையும் கொத்திப்பிடிக்கும் திறலுடையதுமயில். மயில் என்ருலே பாம்புக்கும் நடுக்கம். மங்கையிடை மயிலைக்கண்ட மடநாகம் மடமடவென்று இறங்கியது.

இவ்வாறு ஒன்றையொன்று அஞ்சுவதைக் கண்டுதான் வெண்டலை வேடிக்கையாக நகுதலைச் செய்தது என்றறிந்தார் அப்பரடிகள். தான் கண்ட காட்சியைக் கூறுகிருர் கெடிலவாணரிடத்தில். அப்பாடலை நாமும் படித்து மகிழ் வோம்.

“ கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே”

இப்பாடலில் திங்கள் அரவைக் கண்டு அஞ்சி ஏங்கி நிற்கின்றதெனக் கூறிய அடிகள் திருவாரூர்த் திருநேரிசையில் நாகம் திங்களைக் கண்டு அஞ்சி தன்வேகம் அடங்கி நிற்கும் காட்சியை அழகுறக் கூறுகின்ருர்.

இறைவன்வேழத்தின்உரிவையைப்போர்த்துநின்றபொழுது கருமேகம் எனக்காட்சி அளித்தார். அவர்தம் முடியில் திகழும் திங்கள் அம்மேகத்திடையில் தோன்றும் மின்னல் எனக்கருதி ஆகத்தில் கிடந்த பாம்பு – மார்பில் தவழும் பாம்பு தான் சீறும் வேகம் அடங்கிக் கிடக்கிறதெனக் கூறும் பாடலையும் படித்து இன்புறுவோம்.

" நாகத்தை நங்கை அஞ்ச நங்கையை மஞ்ஞை என்று
வேகத்தைத் தவிர நாகம் வேழத்தின் உரிவை போர்த்துப்
பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென்றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும் ஆரூரனூர்க்கே"

தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருநலங் கொண்ட அப்பரடிகள் இவ்விரண்டு பாடல்களிலும் ஒன்றை யொன்று கண்டு தம்முள் பயங்கி இருக்கும் நிலையை நகைச் சுவை தோன்றக் கூறிய தன்மையிலிருந்து மக்கட்கு ஓர் அரிய கருத்தினைப் புலப்படுத்துகின்றார்.

ஓர் பொருளைக் காணும் போது இதுவோ அதுவோ என ஐயப்பாடில்லாமல் தெளிதல் வேண்டும். தெளிவு ஏற்படின் மனஉறுதிப்பாடு ஏற்படும். மனஉறுதிப்பாடு உடையவன்

" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் "

என்ற திருவள்ளுவர் வாக்குப்படி தான் நினைத்தவற்றைச் செவ்வனே அடையப் பெறுவான். மன ஒருமைப் பாட்டுடன் மயக்கம் கொள்ளாது இறைவனைத் துதித்தால் மனிதரில் தலை யான மனிதராக யாதொரு ஊனமும் இன்றி வீடு பேற்றை அடையலாம் என்பதனை மயக்க உணர்வோடு இருக்கும் மனிதர்களைப் பார்த்து, " மால தாகி மயங்கும் மனிதர்காள் " என விளித்த அவர் சற்று விளக்கமாக

" அஞ்ச யப்பட்டு அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே "

எனக் கூறியிருத்தலைக் கருதினால் மேற்கூறிய நகைச் சுவையில் காணப்படும் அரியகருத்து புலப்படும்.

எனவே, மக்கள் சமுதாயம் மனதில் மயக்கம் கொள்ளாது தெய்வமொன்றே என்ற ஒன்றிய உணர்வுடன் – தெளிவுடன் – திட்பத்துடன் விளங்குதல் வேண்டுமென்பது அப்பரடிகளின் அவாவாகும்.

—★—

திருமந்திரமாலை

டாக்டர். திரு. இரா. மாணிக்கவாசகம்

எம், ஏ. எம், லிட்,. பி, எச்டி.

சென்னை.

திருமந்திரமாலை என்னும் தொடரில் திரு, மந்திரம், மாலை எனும் மூன்று சொற்கள் உள்ளன.

இவற்றுள் திரு என்னும் சொல் சிறப்பு அடையாகும். தமிழில் கிடைக்கும் நூல்களில் தொன்மையானது எனக் கருதப் பெறும் தொல் காப்பியத்தில் இத் திரு' என்னும் சொல் அதிக வழக்கத்தில் இல்லையாயினும் பின்வந்த சங்க இலக்கியங்களில், பரவலாகப் பல்வேறு பொருள்களில் காணலாம். இலக்குமி, செல்வம், சிறப்பு, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை, முதலிய பொருள்களில் வழங்கிவந்துள்ளது. 1

உரையாசிரியர்களில்சிறந்த பேராசிரியர், திருக்கோவையார் எனும் நூலுக்கு உரைகாணும் போது, 'திரு' என்பது 2 கண்டாரால் விரும்பப்படும், தன்மை நோக்கம் எனக் குறிக் கின்றார். எனவே 'திரு' என்பதற்குத் தெய்வத் தன்மை பொருந்திய அல்லது வணக்கத்திற்குரிய எனப்பொருள் கொள்வது தகும். ஆகவேதான் இறைவனைப் பற்றிப்பாடிய நூல்களைத் 'திரு' எனும் சொல் சேர்த்துக்குறித்தனர். 3 இவை திருமுறைகள் என்றே வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாடிய அடியார்களையும் 'திரு' என்னும் சொல் சேர்த்தே குறிக்கும் மரபையும் தமிழில் காணலாம். 4

மந்திரம் :

மந்திரம் என்ற சொல் இலக்கியங்களில் பல்வேறு பொருள் களில் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர்திரள். 5 மந்திரசக்தி

---

1 பரமசிவானந்தம். அ. மு. – மானுடம் வென்றது [பக் 134

2 பேராசிரியர் உரை – திருக்கோவையார்

3 திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி, திருவருட்பா [முதலியன

4 திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், [திருமங்கையாழ்வார் முதலியோர்

5 சிலம்பு – கொலை 137

தரும் எழுத்துக்கள்,6 வேதம்,7 திருவைந்தெழுத்து,8 இரகசியச் செய்திகள்,9 வித்தியாதரன்,10 பெயர்,11 அமைச்சர்,12 வீடு,13 கோயில்,14 கள்,15 குகை,16 குதிரைப்பந்தி17 எனப்பல்வேறு பொருள்களில் இச்சொல் வழங்குகிறது.

திரு என்னும் சொல்லுக்குப் பலபொருள் இருக்க, தெய்வத் தன்மை வாய்ந்த என்னும் பொருளை ஏற்புடையதாகக்கொள்ளு கிறோம். அவ்வாறே மந்திரம் என்னும் சொல்லுக்கும் பல பொருள் இருக்க 'மறைபொருள்' என்பதைப் பொருளாகக் கொள்வது பொருந்தும்.

தொல்காப்பியத்திலும் இப்பொருளில் இச்சொல் வருவது காணுதற்குரியது.

" நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப "18

'சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச்சொல்லும் ஆற்றலுடையவராவார் ஆணையில் கிளக்கப் பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும்' என இந்நூற்பா விற்குப் பேராசிரியர் விளக்கம் தருகிறார்.19

---

6 சிலம்பு – கொலை 143
7 சம்பந்தர் – திருமுறை 2 : 1
8 நாவுக்கரசர் – திருமுறை 6 : 8
9 பெருங்கதை – பிரச்சோதனன் தூது 10
10 சீவகசிந்தாமணி – காந்தருவ 47
11 திருத்தொண்டர் புராணம் – திருஞான 721
12 கம்பன் : அட்சய : 10
13 கம்பன் : ஊர்தேடு : 138
14 கந்தபுராணம் : காமதகனப் : 67
15 குமரகுருபரர் : மதுரைக்கலம்பகம் : 128
16 குமரகுருபரர்: நீதி வெண்பா : 2
17 இலக்கியச் சொல் அகராதி பக் 147
18 தொல் பொருள் : 176
19 தொல் பொருள் பேராசிரியர் உரை பக் 569

மேற்கண்ட நூற்பாவிற்கு விளக்கமாக அமைவதுபோலத் திருவள்ளுவரும் கீழ்க்கண்ட கருத்தைக் கூறுகிறர்.

" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். " 20

இதற்குப் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் ' அருளிக் கூறினும், வெகுண்டுகூறினும், அவ்வப்பயன்களைபயந்தேவிடும் மொழி' என்றும், 'நிறைமொழி மாந்தராவார் இருவகைப் பற்றுக் களையும் நீக்கி ஐந்து புலன்களையும் அடக்கி எவ்வுயிர்க்கும், அருளுடையராய் வாழும் பெரியோர் ' என்றும், ' ஆணையிற் கிளத்தலாவது, இஃதிவ்வாறு ஆகுக எனத்தமது ஆற்றல் தோன்றச் செய்தல் ' என்றும் கூறுவர். 21

மேற்காட்டிய இவ்வெடுத்துக்காட்டுக்களின் மூலம் மந்திரம் என்ற சொல் 'மறைமொழி' என்ற பொருளை உடையது என்பதை அறிகிருேம். அதாவது பலருக்கும் புலப்படாது மறைந்துள்ள அரிய உண்மைகளைத் தன்னகத்தே பொதிந் துள்ள மொழி என்பது. ' மறைமொழிதானே ' எனத் தொல் காப்பியர் பிரித்துக்கூறியதற்குக் காரணம், சபித்தற்பொருட்டாய மந்திரச் செய்யுள் அங்கதப் பாட்டு எனவும், வசைபொருட்டு ஆகாது உலகநலம் பொருட்டு வரும் மறைமொழியினையே மந்திரம் எனவும் வழங்குதல் என்பதாகும். மறை, மந்திரம் என்பன இரகசியப்பொருள் குறித்து நிற்பன. பாலின்நெய், பழத்தின்சுவை, எள்ளின் எண்ணெய், என அறியப்படாமல் மறைந்து நிற்றலின் மறை என்றனர் எனச்சிவஞான சித்தியாரின் குறிப்பு விளக்குகிறது.22 எனவே மறைமொழி, மறை, மந்திரம் என்பன ஒருபொருள் குறித்த சொற்கள் என்பது புலனுகின்றது. உண்மை உறுதிப்பொருளை அறிதற்குத் தகுதி அல்லாதார் செவியில் படாதவாறு மறைத்து வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

டாக்டர். வி. வி. ரமணசாஸ்திரி என்பவர் 'திருமந்திரம்' பதிப்புரையில் மந்திரம் என்னும் சொல்லை மந் – மநநம், திரம் – காப்பது – தன்னை நினைப்பவனைக்காப்பது எனப்பிரித்துப்

---

20 திருக்குறள் 28

21 திருக்குறள் உரைக்கொத்து பக் 31 – 32

22 சிவஞான சித்தியார் – சாதனவியல் சூத்திரம் 9, [செய்யுள் 12

பொருள்காணுகிறார். 23 இச்சொல்மிகப்பழைய ரிக்வேதத்திலோ ஏனைய சாம, யசுர் வேதங்களிலோ இடம் பெறவில்லை. பின்னர் தோன்றிய அதர்வணவேதத்தில் ஓரிடத்தில் மட்டும் வேண்டு கோளுரை என்ற பொருளில் இடம்பெறுகின்றது என்பது குறிக்கத்தக்கது.

இச்சொல்லுக்கு வேறுசில விளக்கங்களையும் தருகின்றனர். மத்ரி குப்த பாஷனே '- மந்திரம் ரகசிய மொழியாகும் என்றும், 'மனனம் த்ராயதே' - மனனம் காப்பாற்றும் என்றும் கூறி காப்பாற்றத்தக்க ரகசியமொழி மந்திரமாகும் என்றும் கூறுவர்.

'மனத்தை உறுதிப்படுத்துவது மந்திரம்' (மன + ஸ்திரம்) என்றும் கூறுதல் கூடும்.

மன + த்ர (mana + tra) எனவும் பிரிக்கலாம். மன என்பது மனத்தின் அடிச்சொல். 'த்ர' என்பது பிரிப்பது (to liberate). எனவே மனத்தின் எல்லையில் இருந்து பிரிப்பது என்பது இதன்பொருள். இருந்தஇடத்தில் இருந்தேஎத்தனையோ சாதனைகளை மிகச்சிறிய காலத்திற்குள் செய்து முடிப்பதுபோலக் கற்பனை செய்யும் அளவுக்கு ஆற்றல் உடையதாயினும் இம் மனத்திற்கும் ஓர் அளவு உண்டு. அது, அதன் அனுபவம், கல்வி, சூழ்நிலை இவற்றின் அடிப்படையாகக் கொண்டதாக அமையும். இவற்றிலிருந்து விடுதலை பெற்று நிறைமனமாக விளங்கத்துணை செய்வதே மந்திரமாகும்

எந்தமுறையில் இச்சொல்லை விளக்கினாலும் அதன்பொருள் மறைக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட வேண்டியது என்பதை நன்கு ஆராயின் அறியலாம்.

மாலை :

'ஞானம் முதல் நான்குமலர் நற்றிரு மந்திரமாலை' 24

எனச் சேக்கிழார்தம் திருத்தொண்டர் புராணத்தில் குறிக்கிறார்.

திருமந்திரத்தின் தற்சிறப்புப்பாயிரத்தில் இதுபற்றிக் குறிப்பு காணப்படுகிறது.

---

23 டாக்டர். V. V. ரமண சாஸ்திரி – திருமந்திர
[முன்னுரை – பக் 16

24 திருத்தொண்டர் புராணம் திருமூலர் : 26

" மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடிநின் றோதலு மாமே " 25

இவ்விரு உறுதியான சான்றுகளினால் இந்தநூல் திருமந்திரமாலை என்ற பெயரோடு வழங்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

மாலை என்பது தொடையல் அல்லது தார் என்ற பொருள் தருவது. சொல்மாலை, பாமாலை, எனவரும் வழக்குகள் இதனைத் தெளிவுபடுத்தும். மாலை என்றசொல் இப்பொருளில் வடமொழியில் முதன்முதலில் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'சுபந்து' என்பவரால் இயற்றப்பட்ட 'வாசவதத்தா' என்னும் காவியத்தில் காணப்படுவதால் இது வடமொழிச்சொல்லாக இருத்தல் முடியாது என வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிப் புலமைமிக்க மறைமலையடிகள் கருதுகின்றார். 26

பெரும்பாலான சித்தர்களின் பாடல்கள் அந்தாதிப்போக்கிலேயே காணப்படுகின்றன என்பது குறிக்கத்தக்கது. ஆதலின் திருமந்திரமும் அந்தாதிப்போக்கில் இருந்திருத்தல் வேண்டும், ஒருபாட்டின் அந்தம் அடுத்தபாட்டின் ஆதியாகவருதலின் இதனை ஒருமாலையாகக்கருதலாம். பிற பழைய இலக்கியங்களில் இடைச்செறுகல் அமைந்ததுபோல இந்நூலுள்ளும் அதிகமாகஅமைந்துள்ளது ஆதலின் இவ்வந்தாதிப்போக்கினைக் காணமுடியவில்லை. அந்தாதிப்போக்கில் உள்ள சிலபாடல்கள் திருமூலர் பாடியனவாக இருக்கலாம்.

திருமந்திரமாலை :

தெய்வத்தன்மை பொருந்தியதாதலினாலும், நுவல் பொருள் மந்திரமாதலினாலும், சொன்மாலையாய் இந்நூல் அமைந்திருத்தலின் திருமந்திரமாலை எனும்பெயர் பொருந்துவதாக உள்ளது.

---

25 திருமந்திரம் : 148

26 மறைமலையடிகள்–மாணிக்கவாசகர் வரலாறு–1. பக் 386.

வாசகர் கடிதம்

மடாதிபதிகளின் சேவைக்கு ஒத்துழைக்க!

இன்று நாட்டில் அரிசன மக்களை இஸ்லாமிய இமாம்கள், இந்து மதத்திலிருந்து தங்கள் மதத்திற்கு மாற்றுவதில் தீவிர முயற்சி செய்து மாற்றி வருகிறார்கள். கிறித்துவர்கள், மதப்பிர சாரத்தில் தீவிர ஈடுபாடுடன் மக்களைக் கவர்ந்து வருகிறார்கள். வைத்தியம் என்ற பெயராலும், கல்வியின் பெயராலுமே மாற்ற முயல்கிறார்கள். இதனை இந்து சமயத்தவர்கள் உணர்வதில்லை. ஒவ்வொரு இந்துவுக்கும் சமய உணர்வுவேண்டும். இராம நாதபுரம், திருநெல்வேலி மாவட்டம் ஆகியவைகளில் நடந்த நிகழ்ச்சிகளில் சைவ மடாதிபதிகள் சமயத்தொண்டில் ஈடுபாடு உடையவர்களாக வெளிவந்து சேவை செய்தமையால் மத மாற்றம் நின்றது. மதம் மாறினவர்கள் தாய்மதம் திரும்பி வருகிறார்கள். இதனை இந்துசமயத்தின் அறிஞர்கள். பிரமுகர்கள், இளைஞர்கள் உணர்ந்து நமது மடாதிபதிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, சமயத்தைக் காப்பாற்ற, நம்மவர்கள் பிறமதம் செல்லாமல் பாதுகாக்க, மதம் மாறுவது சட்டவிரோதமென அரசியல் சட்டமாக்க முன் நிற்பார்களாக.

நா. அருணாசலன்
செயலாளர்,
அருள்நெறித் திருக்கூட்டம்,
கண்டவராயன்பட்டி.

★

ஞானசம்பந்தம் மலர் 40. இதழ் 11. துன்மதி – புரட்டாசித் திங்கள் அபிராமி அந்தாதி "ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவிஉறைபவளே "கட்டுரை ரொம்பப்பிரமாதம்.

L. Veerappan
Aynavaram Madras 23.

"வில்லியும் – பாரதியும்"

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

அமரகவி பாரதியாரின் நூற்றுண்டு விழாவைத் தமிழ்நாடும் உலகமும் மிகச் சிறப்பாகத் திட்டமிட்டுக் கொண்டாடக் காத்திருக்கும் நேரம் இது. இந்த நேரத்தில் பாரதி பற்றிய சிந்தனே, புதிய எழுச்சியோடு தமிழகத்தில் நினைவு கூறப்படும்: பாரதியையும் – பாரதியின் படைப்புக்களேயும் புதிய நோக்கில் சிந்திக்க இது ஒரு நல்லவாய்ப்பு. பாரதியைத் தனித்து ஆராயாமல், வில்லியோடு ஒப்புநோக்கி ஆராய்வது பல புதிய வடிவங்களேயும் – பரிணுமங்களேயும் நமக்கு நல்கும். பாரதியின் விரிந்த கவிதைப் பரப்பை – வில்லியோடு ஒப்பிடவேண்டி யிருத்தலின். 'பாஞ்சாலி சபத' அளவில் பாரதியைச் சுருக்கிக் கொள்ளவேண்டும். மாபாரதம்வடித்த வில்லியைப் பாரதியோடு இணைத்துப் பார்ப்பதால் – பாரதக் கதையின் விரிந்த பரப்பை ஆராய்வதைவிடுத்து – ஒரு பகுதியை – 'சூதுபோர்ச்சருக்கத்தை' மட்டும் ஒப்பு நோக்குக்காக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, வில்லியும் – பாரதியும் என்ற ஒப்புநோக்கு, பொதுமை அடிப்படையில், இருவேறுமாறுபட்ட காலத்தில் வாழ்ந்த இருபெரும் மகாகவிஞர்களே முழுவதுமாக ஆராய்வ தாக அமையாமல் – இவர்கள் படைப்பின் ஒவ்வோர் பகுதி பற்றிய ஒப்பாய்வாகவே அமையமுடியும். எனவே, பாரதியின் பாஞ்சாலி சபதத்தை – வில்லிபாரதத்தின் 'சூதுபோர்ச்சருக்கத் தோடு' ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சி இங்கே அரும்பு கின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பலவாருகப்பகுத்து அறிஞர்கள் ஆராய்கின்றனர். பொதுவாக ஒரு புதிய நோக்கில் பார்த்தால் தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிப் போக்கை – இவற்றின் மாறுதல்களே நான்காகப் பகுக்கலாம். கருத்து முதன்மை பெற்ற காலம் – முதலாவது. சங்கநூல்களே இவ்வகை யில் அடக்கலாம். இரண்டாவது இசையே முதன்மை பெற்ற காலம். தேவார – திவ்வியப்பிரபந்த எழுச்சி நோக்கியது இப் பகுப்பு. யாப்பே முதன்மை பெற்ற காலம் மூன்ருவது. இதனேச் சிற்றிலக்கியக்காலம் எனலாம். ஒரே அமைப்பில் – சிறுசிறு மாற்றங்களோடு கிளேத்த உலாக்களும் – பிள்ளேத்தமிழ்களும் –

அகில இந்திய வானெலி நிலேயம்.

கலம்பகங்களும் பல நூற்றாண்டுக்காலம் புலவர்களை ஆட்கொண்டிருந்தன. தற்காலம், இம்மூன்றுக்கும் மேலாக உணர்ச்சியே முதன்மை பெற்றுத் திகழும் காலம் காட்டாற்று வெள்ளம்போல் கரைபுரண்டுஓடும் இவ்வுணர்ச்சிப் போக்கிற்கு அடியிட்டுத் தந்த மிகப் பெருங்கவிஞராக பாரதியைத் தரிசிக்கிறோம். இருபதாம் நூற்றாண்டு கவிதையைப் பொறுத்த வரையில் பாரதி நூற்றாண்டே. இதனைப் பாரதியுகம் என்றே கூட அழைக்கலாம். பாரதி மறைவுக்குப் பிறகு இந்த அறுபது ஆண்டுக் காலத்தில் பாரதியின் தாக்கத்தால் பாதிக்கப்படாத கவிஞர்களே இல்லை என்னலாம். பாரதியின் பாஞ்சாலி சபதம் ஒரு காவியம் மட்டுமில்லை. அது ஒரு கட்டவிழ்ந்த உணர்ச்சிப் பேராறு. பாரதியைக் காலகாலத்திற்கு நினைவு கூற வைக்கும் அவரது இலக்கிய வைப்பு நிதி. கவிஞனின் பல்வேறு உள்ளக் கிடக்கைகளைச் சேமித்து வைத்திருக்கும் ஒரு கருத்துச் சுரங்கம். சுருங்கச்சொன்னால் பாரதியின் முழுமையான வாழ்வு பாஞ்சாலி சபதத்தையே சார்ந்ததாகும். இது பல நூற்றாண்டுகளுக்குப் பின்னே நினைவு கூர்ந்து பார்க்கப்பட வேண்டியது.

பாரதியின் வெற்றி – அவரது கவிதைகளின் எளிமையில் நிற்பது. சந்தம் அக்கவிதைகளின் உயிர்த்துடிப்பு. உணர்ச்சிகளைக் கொட்டுவது கவிஞருக்கு வாடிக்கை. பல இடங்களில் உரை நடைக்கும் – பாரதியின் கவிதைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி மயிரிழை போன்றது. பாரதிதாசனில் இவ் விடைவெளி சற்றுப் பெரிது. எல்லாரும் கவிதையை ரசிக்கக் கவிதையை எளிமைப்படுத்துவது தேவைதான். அதுவே அளவு கடந்து போய்விட்டால் – ஒரு சமுதாயத்திற்கே இந்த எளிமை மட்டுமே புரியும் என்ற நிலை உருவாகி விட்டால் – பண்டை இலக்கியங்களின் கதி என்னவது? எனவே, விரைவாகச் செய்யப்படும் மாற்றங்களின் விளைவுகள் குறித்தும் நாம் ஆராயக் கடமைப் பட்டிருக்கிறோம். பாரதியுகத்தில் பாதிப்பால் – அதன் எளிமையால் தமிழ் பாமரர் கைக்கும் மாறியது உண்மைதான். ஆனாலும், கடினநடையில் அமைந்த கருத்துவளமிக்க நமது தொன்மைக் கவிதைகளை அணுக முடியாத பாதிப்பையும் பரவலாக மக்கள் மத்தியிலே இது உண்டாக்கியிருப்பதை மறுக்க இயலாது. பலருக்கு இது கசக்கும். உண்மைகள் பெரும்பாலும் இப்படிக் கசப்பாகவே அமைகின்றன. உணர்ச்சிகளைக் கடந்து – நடுநிலையோடு நாம் ஆராயும் புதிய யுகம் வரப்போகிறது. அப்போது நமது, இலக்கியங்களைப்பற்றிய பல சிந்தனைகள் மாற்றமடையவே போகின்றன.

தனிப்பாடல்களில் கவிஞர்கள்பெறும்வெற்றிமுழுமையான தல்ல. இவற்றுள் சில எதிர்பாராது வெற்றிபெற்று நிலைத்துவிடு வதும் உண்டு. நீண்ட தொடர்நிலைச் செய்யுட்களிலேயே கவிஞர்களின் முழுமையைக் காணமுடியும். பாரதியின் பாஞ்சாலி சபதம் காப்பிய யுத்திகளோடு கூடிய ஒரு தனிநூல். கண்ணன் பாடல்கள் காப்பியமாக அவை ஒரு கவிதைத் தொகுதி. குயில்பாட்டு, ஓகோ என்று புகழப்படுவது உண்மை. தெளிவான உள்ளீட்டை இன்னது என விளங்கிக் கொள்ள இயலாத ஒரு இலக்கியப் புதிரே அது. ஆனாலும் அதன் இலக்கியத்தரம் சிறப்பானது. கவிதை உலகில் பாஞ்சாலி சபதம் பதித்த சுவடுகள் வன்மையானவை. பாரதி காலத்தில் கருத்துக்களைக்கூற அவர் கையாண்ட கவிதை யுத்தி மகத்தான வரவேற்பைப்பெற்றது. தமிழகமேஇக்கவிதைகளில்கட்டுண்டு நின்றது. பாரதியைப்போல் கருத்து வளமும் - மனோவேகமும் - தேசப்பற்றும் மிக்கபலர் அக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். இவர் களும் தங்கள்கருத்துக்களுக்குஇலக்கியவடிவம்தரவிரைந்தனர். பாரதி கவிதைத்துறையில் பெற்றிருந்த செல்வாக்கு, இவர்களை அத்துறையில் அடியிடத் தடையாயிற்று. புதுமைப்பித்தன் - பாரதி வெற்றிபெறாத புதுத்துறையாகச் சிறுகதை வடிவங்களை உருவாக்கி மகத்தான வெற்றி கண்டார். கல்கியின் தேச பக்தியும் - ஆவேசங்களும் நாவல்களாக வடிவங்கொண்டன. திரு. வி. க. வின் எண்ண ஒப்பங்கள் துள்ளுநடையில் கட்டுரைக் கோலங்களாயின. பாரதியின் கவிதை ஆட்சி - அதன் வலிமை வேறுபல புதிய இலக்கியயுத்திகள் தோன்ற இவ்விருபதாம் நூற்றுண்டில் வழிகோலிற்று. இவ்வகையில் கவிதையும் - பாரதியும் பிரித்தறிய இயலாத பிணைப்புக்குள் இணைந்தனர்.

கவிதைகளுக்குத் தலைப்புகள் எதுவாக இருந்தாலும் பாரதி கவிதைகளின் உள்ளோட்டங்கள் சில அடிப்படைகளையே சார்ந்து அமைந்தன. நாட்டுப்பற்று - தமிழ் எழுச்சி - பெண் விடுதலை - இறைநலம் பேணுதல் என்பன குறிக்கத்தக்கன. இவை அனைத்தையும் பொதிந்து நிற்கும் அரிய படைப்பு பாஞ்சாலி சபதம். கவிஞனின் வெற்றி-அவன் பாடு பொருளைத் தேர்ந்து எடுத்த அளவிலேயே அமைந்துவிடுகிறது என்பர். பாஞ்சாலி சபதத்தை - பாரதக்கதையைப் பாரதி தேர்ந்தெடுத் தமை, ஏதோ ஒரு அடிப்படை உடையதாகவே இருக்க வேண்டும். இந்த அடிப்படையைக் காணும் முயற்சியிலேயே பலஅரிய உண்மைகள் வெளிப்படுதல்கூடும். பாரதி போற்றி வியந்த கவிஞர்கள் பலர். வள்ளுவனையும், இளங்கோவையும்

கம்பனையும் பலவாறு போற்றிப் புகழும் பாரதி, வில்லியை விரித்துப் பேசவில்லை. பாரதத்தைப் பாராட்டிக் கூறவில்லை. இருந்தும், பாரதக்கதை பாரதியின் கவிதைப்பொருளாக அமைந்தது எதனுல் என்று நமது சிந்தனை நீள்கிறது.

"போற்றித்தாய் என்று தாளங்கள் கொட்டடா. போற்றித் தாய் என்று பொற்குழல் ஊதடா" என்று பாராட்டிப் பெண் மைக்குச் சிறப்புச் சேர்த்தவர் அமரகவி. "அன்னமூட்டிய தெய்வ மணிக்கையின் - ஆணை கிடைத்திடில் அனலையும் விழுங்குவோம்" என்று கிளர்ந்தெழுந்தது அவர் பாடல்கள். "பாதகம் செய்வாரைக் கண்டால் - நீ பயங்கொள்ளலாகாது பாப்பா. மோதி மிதித்துவிடுபாப்பா. அவர் முகத்தில் உமிழ்ந்து விடுபாப்பா" என்று பாப்பாவுக்கே வீரமூட்டிப்பெண்மைக்குப் பெருமை சேர்த்தது அவரது கவிதைகள். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்க நினைத்தவர்களை விந்தை மனிதர் என எள்ளி நகையாடினர். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என ஆவேசம் பொங்கி எழுந்தது பாரதிக்கு. இந்தப் பாரதியின் பெண்விடுதலை நோக்கிற்குப்பாஞ்சாலிசபதம்பாடுபொருளாக அமைந்தது. பாஞ்சாலி பாரதியின் விடுதலைபெற்ற புதுமைப் பெண்ணுனள். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று எழுந்து நின்று ஆர்ப்பரித்தாள்; மூலக்கதையில் இருந்த சூதுபோர்ச் சருக்கம் என்ற பழம்பெயரை வீசி எறிந்துவிட்டுப் பெண் ணுக்குப் பெருமைதர பாஞ்சாலி பெயரால் நூல்வடிக்கிருர் அமரகவி; கண்ணகி கால் சிலம்பால் விரிந்தகதை - போலவும், மணிமேகலை துறவால் அமைந்தகதை போலவும் பாண்டவர் கதை - பெண்மைக்குச் சிறப்புச்செய்யும் நோக்கில் பாஞ்சாலி சபதமாயிற்று.

இராமகாதையும், பாரதமும் இந்தியநாட்டின் தொன்மைக் காப்பியங்கள். தமிழ் இலக்கியங்களில், இவ்விரண்டு கதை களும், பல்வேறு இடங்களில், ஏதேனும் ஒரு நோக்கில் எடுத்தாளப்படுகின்றன. தமிழில் கம்பனுக்கு முன்னே நிலவிய இராமகாதைகள் பலவும் கம்பனது ஒளியில் கரைந்து போய் விட்டதைப் போல் - தமிழில் வில்லிக்கு முன்னே தோன்றிய பல பாரதம் பற்றிய நூல்கள் வில்லிக்குள் மறைந்து போயின. பாரதக்கதையை தெள்ளுதமிழில் சந்தத்தால் வடித்த 16ஆம் நூற்றுண்டின் பெருங்காப்பியம் வில்லிபாரதம். வில்லி வடித்த பாரதம் கதையளவில் - இராமகாதையைவிடப் பெரியது. என்றுலும் ஏறத்தாழ 4000 பாடல்களுக்குள்ளாகக் கதையைச் செறிவோடு பாடுகின்ருர் வில்லி. (தொடரும்

" இயக்கம் காண்போம் "

வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.,

மனமாசு கழுவுதற்கு மார்க்கம் என்ன ?
மக்களெல்லாம் அதைத்தேடி ஓடு கின்ருர்
தினம்மாசே செய்கின்ற எண்ணம் கொண்டு
திருக்கோயில் வலம்வந்தால் மாசா போகும் ?
வனவாசம் போவதுபோல் வாழ்க்கை எல்லாம்
வளம்சேர்க்க எவ்வழியும் ஏற்று வாழ்வார்
எனக்கவலும் பெரியோர்கள் இயக்கம் காண
ஏற்றமிகு ஞானசம்பந் தரேடு காண்பீர் !

இவ்வுலகம் போகின்ற இயல்பு கண்டு
ஏதேனும் செய்தால்தான் தீர்வு என்று
தெவ்வரென யாருமின்றித் தூய அன்பால்
திசையனைத்தும் ஒன்ருகி இயக்கம் காண்போம் !
அவ்வுலக வாழ்வுக்கு அருளே வேண்டும்
அதைத்தேடி அலைகின்ற மக்கள் கூட்டம்
இவ்வுலக வாழ்வினில் இன்னல் தீர
இறையடியே சிந்தித்தல் மருந்தாய்க் காண்போம் !

நலிந்தோரை வாழ்வித்தல் ; நல்லோர் பல்லோர்
நன்ருக வாழ்ந்திடவே வழியும் காண்டல் ;
மலிந்துபோன அநாகரிக வாழ்வு தன்னை
மாற்றியே அமைத்திடல் ; மக்கள் எல்லாம்
கலியுகக் காலமெனக் கருத்துக் கூறிக்
கயமையைச் செய்கின்ற நிலையை மாற்றல் ;
வலியாரைப் போற்றுகின்ற நிலையால் நாமும்
வலுவான நல்லியக்கம் கொண்டு வாழ்தல் ;

இத்தனை கொள்கையும் இயக்கம் கொண்டு
இன்னலே இல்லாத இன்ப வாழ்வு
கொத்தெனவே பூக்கின்ற குறிக்கோள் தன்னல்
குவலயமும் வாழ்கின்ற நாளைக் காண்போம்!
பத்திநெறி பரப்புதற்குப் பள்ளி காண
பாமரனைப் பிணியின்றி வாழ வைக்க
இத்தரையில் நல்லவையே நாடும் மக்கள்
இவ்வியக்கம் தன்னிலே இணைய வாரீர்!

இவைபோன்ற கருத்துக்கள் ஏந்தி மக்கள்
இன்னலைத் துடைத்திடவே எழுப்பி விட்டு
நவையினையே திட்டமிட்டு நஞ்சாய்க் கூறும்
நாட்டிலுள்ள பல்லேடு தம்முள் வேருய்
சுவையாக நாற்பத்தொன் ருண்டில் தோன்றும்
சுந்தர ஞானசம்பந்த இதழே! வாழ்க!!
குவலயத்தில் குருமணியின் ஆசி கொண்டு
குறைநீக்கி நிறைகண்டு வாழ்க! வாழ்க!!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 18—11—81 புதன்கிழமையன்று அவளிவணல்லூர் அருள்மிகு சாட்சிநாதசுவாமி திருக்கோயிலிலும் திருஅரதைப் பெரும்பாழி அருள்மிகு பாதாளவரதசுவாமி திருக்கோயிலிலும் திருஇரும்பூளை (ஆலங்குடி) அருள்மிகு ஆபத்சகாயர் திருக்கோயிலிலும் சிறப்பான முறையில் நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் கூடிய வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பட்டன. மாலை, ஆலங்குடி என வழங்கும் திருஇரும்பூளை, ஆலயத்தில் தருமபுர ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகளும், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களும் குடவாசல் திரு. கோ. சுப்பிரமணியன் அவர்களும் சமய விரிவுரை நிகழ்த்தினர்கள். அச்சிடப் பெற்ற தலத்திருப்பதிகநூல் வழிபாட்டில் கலந்துகொண்ட அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர்கள் பலர் ஆலய வழிபாட்டிற் கலந்துகொண்டு பயனுற்றனர். அவளிவள்நல்லூரிலும், அரித்துவாரமங்கலத்திலும் நிர்வாக அதிகாரிகள் வரவேற்றனர்.

கார்த்திகை ஞாயிறுதீர்த்த விழா

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை அருள்மிகு ஆனந்தவல்லி உடனுகிய அருள்மிகு சக்திபுரீசுவரசுவாமி, கார்த்திகைஞாயிறுதோறும் அம்மையுடன் தருமபுரத்தின் காவிரிவடகரைக்குஎழுந்தருளித்தீர்த்தங்கொடுத்தருளினர். மாயூரத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு தீர்த்தநீராடி இறையருள்பெற்றனர்.

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் என வழங்கும் திருத்துருத்தி அருள்மிகு அரும்பன்னவனமுலையம்மை உடனுகிய அருள்மிகு சொன்னவாறறிவார் திருக்கோயிலில் கார்த்திகைஞாயிறுதோறும் அம்மையுடன் காவிரிக்கு எழுந்தருளித் தீர்த்தங்கொடுத்தருளினர். குத்தாலத்தைச் சுற்றியுள்ள

கிராமமக்கள் பலர் இத்தீர்த்த விழாவில் கலந்துகொண்டு நீராடி இறையருள்பெற்றனர்.

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்ற

பதின்மூன்ருவது

திருமுறைக் கூட்டு வழிபாட்டு விழா

மதுரை, நவ. 17— மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றத்தின் சார்பில் பதின்மூன்ருவது திருமுறைக் கூட்டு வழி பாட்டு விழா மதுரை ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் சங்கத்தார் கோயில் திருமுன்பு நடைபெற்றது.

புலவர் சி. கல்யாணசுந்தரனுர், திருவாசகப் பாராயணத்தை ஸ்ரீ சித்திவிநாயகர் சந்நிதியில் தொடங்கி மன்ற அன்பர்கள் பாராயணம் செய்துகொண்டே ஸ்ரீ மீனுட்சிசுந்தரேஸ்வரரை வலமாக வந்து வழிபாடு செய்துகொண்டு சங்கத்தார் சந்நிதியை அடைந்தனர். நிகழ்ச்சிக்கு மதுரைக் காமராசர் பல்கலைக்கழக தமிழியற்புலத் தலைவர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனுர் தலைமைவகித்தார்.

திருஞானசம்பந்தர் அருளிய திருஇயமகப் பதிகம். 'தளிரிள வளரொளி', 'மண்ணில் நல்ல வண்ணம்' என்ற பதிகங் களையும் திருநாவுக்கரசர் அருளிய ஆலவாய்த்தாண்டகத்தையும் அரசு இசைக்கல்லூரி மாணவர் கு. மணிகண்டனும், யாழ், சீதாராமனும் பாராயணம் செய்தனர். மதுரைப் பல்கலைக்கழக சைவத்துறைப் பேராசிரியர் முதுபெரும் புலவர் க. வச்சிரவேல் முதலியார் இரண்டு பதிகஉட்பொருளை விளக்கினுர். பேராசிரியர் க. வெள்ளைவாரணனுர், இடர்ப்பாடான இயமகப் பதிகப் பொருளையும் 'தளிரிள' பதிகப் பொருளையும் விளக்கினுர். திருத் தாண்டகஉட்பொருளைதலைமைஉரையாக எடுத்துப்பேராசிரியர் விளக்கிப் பேசினுர். யாதவர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் சி. இராமலிங்கனுர், புலவர் நீ. சி. சுந்தரராமன், புலவர் சு. இராமச் சந்திரன் முதலியோர் பதிகச் சிந்தனை வட்டத்தில் கலந்து கொண்டனர்.

வித்துவான் தா. குருசாமிதேசிகர் அனைவரையும் வரவேற்று நன்றி கூறினுர்.

— தினமணி. *18—11—81.*

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதி௵ மார்கழிமீ 1௳ முதல் 29௳ முடிய)

(16—12—81 முதல் 13—1—1982 முடிய)

ஸ்ரீ துன்மதி௵ கார்த்திகைமீ 30௳ மங்களவாரம் ஆயில்ய நக்ஷத்திரம் தைதுல கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 46 நாழிகை 38 வினாடிக்கு கன்னியா லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரியபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுர்ராசி சங்கிரமணமாக தேவதினப் பிராதகாலம் பொழுது மார்கழி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மார்கழிமீ 1௳ புதவாரம் ஷடசீதி புண்ணிய காலமாகும். எல்லோரும் மாதம் பூராவும் காலை 4-30 மணிக்கு முன்னதாகத்துயில் எழுந்து காலைக் கடன் முடித்து குளிர்ந்த நீரில் ஸ்நானம்செய்து தேவாலயம் சென்று உஷாக்காலத்தில் ஈஸ்வரதரிசனம் செய்யவேண்டியது. அதனால் சகல பாக்கியங்களும் குடும்பத்தில் சுபிட்சமும் ஏற்படும். சங்கிரமண கால கிரக ஸ்திதியினால் உலகத்தில் அரசர்கள் ஜனாதிபதிகள் மந்திரிகள் நாட்டில் நலன்களுக்கு நீதியான பரிபாலனம் செய்து மக்களை இரட்சிப்பார்கள் பிரஜைகள் ஜீவனோபாயத் தொழில்களில் முன்னேற்ற ஸ்திதி யுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிபீடங்களில் ஈஸ்வரன் திருவருள் கடாட்சம் பெற்று சிவசமய பரிபாலன கர்த்தாவாகி வந்து திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் உலகத்துக்கு சிவாசார நியமம் சிவதர்மம் நல்ல நீதி ஆகிய உயர்வழியை திருவாய்மலர்ந்து போதித்து அருளிச் செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலப் பூசைகள் விசேஷ பூசைகள் சிறப்பாக நடைபெறும். மக்கள் அனைவரும் தெய்வச் சிந்தனை உடையவர்களாகி ஆலயம் சென்று தெய்வ

சந்நிதியில் ஈஸ்வர தரிசனம் செய்து தெளிந்த முகப்பொலிவுடன் இலட்சுமி கடாட்சத்தில் சீரிய வாழ்க்கை நடத்துவர்.

சந்திர கிரஹணம்

குறிப்பு :- ஸ்ரீ துன்பதிஸு மார்கழிமீ 25 ஆம் தேதி ஸ்திர வாரம் (ஜனவரி 9, 10௳ 1982) புனர்பூச நக்ஷத்திரம் 2 ஆம் பாதத்தில் பூர்ண இராகு கிரஸ்த கபிலவர்ண சோமோபராக புண்ணியகாலம் கிரஹணம் இந்தியாவெங்கும் தெரியும்.

இந்தியன் ஸ்டாண்டர்டு மணிப்படி

மார்கழிமீ 25௳	ஜனவரிமீ 9௳	ஸ்பர்சம்	இரவுமணி	11—44
,,	,,	நிமீலனம்	,,	12—47
,,	,,	மத்தியம்	,,	1—26
,,	,,	உன்மீலனம்	,,	2— 5
,,	,,	மோக்ஷம்	,,	3— 8
		ஆதியந்தம் புண்ணியகாலம்		3—24

பிரமாணம் 1. 34. ஸ்பர்சம் சந்திரபிம்பத்தின் கிழக்குக்கு 14 பாகை வடக்கே தள்ளியும் மோக்ஷம் ஷை பிம்பத்தின் மேற்குக்கு 19 பாகை வடக்கே தள்ளியும் ஏற்படும். தாத்ரு பர்வா அன்று பருவ சிரார்த்தம் செய்யலாம். மிருகசீர்ஷம் பிற்பாதி, திருவாதிரை, புனர்பூசம், விசாகம், பூரட்டாதி இந்த நக்ஷத்திரங்களில் பிறந்தோர் சாந்தி செய்துகொள்க.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்கஷ்ம் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் காரகனின் வலுவில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு டிசம்பர் 28௳ ஓர் நன்மை ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் நூலெழுதல் போதனு முறைகளில் முன்னேற்றமும் சிறப்பும் உண்டாகும். பூமியில் இயந்திரசாதனங்களில் அபிவிருத்தியாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். டிசம்பர் 19, 20, 21, 22, 28, 29, 30, 31 ஜனவரி 1, 4, 5, 8 9 தேதிகளில் ஊக்கம், ஜெயம்,

தெய்வபுண்ணியபலன் ஆகிய நற்பலன்கள் ஏற்படும். டிசம்பர் 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி - மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுமாரானபலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு இரத்தபித்தமயக்கம் வந்து உடன் குணமாகும். வீடுவாகன பிராப்தியில் பணம்முடங்கும் ஆயினும் நல்ல சௌக்கியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அரசாங்கக் காரியம் கெடியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். எல்லாவிஷயங்களிலும் கண்யம் நிலவும். டிசம்பர் 21, 22, 23, 24, 25, 31 ஜனவரி 1, 2, 3, 6, 7, 10, 11, 12 தேதிகளின் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும் டிசம்பர் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத் தியில் பணவருமானங்களில் நல்லநிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் நலனில் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொள்ளநேரும். வீடுவாகனங்களில் டிசம்பர் 28வுக்கு நல்லனஏற்படும் வித்தியா வியாபாராதிகளில் ஒப்பந்த லேவாதேவிகளில் விசேஷபலன் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 16, 17, 24, 25, 26, 27 ஜனவரி 2, 3, 4, 5, 8, 9, 13 தேதி களில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். டிசம்பர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கனிசமாகவரும். ஓர் பூமி பாக்கியம்வரும். அரசாங்கத்தில் நன்மைகள் ஏற்படச்செய்யும் சத்துருபங்கம் ஆகும். தெய்வபலத்தில் எல்லாக்காரியங்களையும் வெற்றிகரமாகவும் புகழுடனும் நிறைவேற்றுதல் ஆகும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். டிசம்பர் 18, 19, 20, 26, 27, 28, 29, 30 ஜனவரி 4, 5, 6, 9, 10, 11, 12 தேதிகளில்

தனுதாயம், இஷ்டசித்தி, மித்திரர் பிரபலஸ்தர் சந்திப்பு ஆகிய நற்பலன்கள் ஏற்படும். டிசம்பர் 31 ஜனவரி 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணம் வரவும்செலவும் சரிசமனுக இருந்து வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நல்லஸ்திதியை ஏற்படுத்தும். டிசம்பர் 28வ அளவில் உத்தியோகம் அரிய பெரிய காரியங்களில் மதிநுட்பத்தால் சாதனையை உண்டு பண்ணும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனைசெய்யமனவெறுப்பு நீங்கும். நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின்சௌக்கிய நன்ருக இருந்துவரும். டிசம்பர் 16, 17. 21, 22, 28, 29, 30, 31 ஜனவரி 1, 6, 7, 8, 9, 13 தேதிகளில் தனுதாயம், தெய்வானுகூலம் ஏற்படும். ஜனவரி 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னிராசி 9 பாதங்களும் நற்பலன்தரும். குடும்பாவிருத்தி யில் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். வித்து வத்துவம் கலைத்துறைகளில் நன்மதிப்பும் நல்லபிரயோசனமும் ஏற்படும். வீடுவாகனப்பிராப்தியில் பணம்முடங்கும். நவீன பொருளின் அனுபோக பிராப்தியையளிக்கும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். டிசம்பர் 19, 20, 23, 24, 31 ஜனவரி 1, 2, 3, 8, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரசகோதரிகளின் நலம் நன்ருக இருந்துவரும். ஜனவரிமுதல் வித்தியா வியாபாராதிகளில் எழுத்துமுல விஷயங்களில் நல்லனஏற்படும். நூதனவாகனம்

வாங்குதல் ஆகும். ஓர் புனிதஸ்தலம் செல்தல் ஆகும். தார புத்ரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். டிசம்பர் 16, 17, 18, 21, 22, 26, 27 ஜனவரி 1, 2, 3, 4, 5, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - மதோ ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கண்டய ஸ்திதிக்கு ஏற்ப வந்துசேரும். வெள்ளைக்கல் பதித்த ஆபரணங்களின் பிராப்தியையளிக்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் அரசாங்க நன்மைகளை உண்டுபண்ணும். பொதுநலம் தர்ம காரியங்களில் ஈடுபடுதல்ஆகும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். டிசம்பர் 16, 17, 18, 19, 20, 23, 24, 25, 29, 30 ஜனவரி 4, 5, 6, 7, 13 தேதிகளில் தனுதாயாதி நற்புலன்களை யளிக்கும். ஜனவரி 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம் மற்றதேதி களில் மத்திமபலன்தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். தேகதில் வெப்பாதிக்கமாக நலிவு ஏற்பட்டுக் குணமாகும். டிஸம்பர் 31வ ஆனுல் வித்தியா வியாபாராதிகளில் உத்தி யோகத்தில் ஓர் உயர்வை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். டிஸம்பர் 18' 19, 20, 21, 22, 26, 27, 31 ஜனவரி 1, 6, 7, 8, 9 தேதிகளில் தனுதாயாதி நற்பலன் களையளிக்கும். ஜனவரி 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் மதிப்புடன் வந்துகொண்டிருக் கும். சில சந்தர்ப்பங்களில் நிர்ப்பந்தமானதும் அவசியமானது

மான செலவையும் ஏற்படுத்தும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஜீவனோபாயங்களில் முன்னேற்றஸ்திதியை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களையும் திறம்பட நடத்த ஊக்கம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் டிஸம்பர் 21, 22, 23, 24, 25, 28, 29, 30 ஜனவரி 2, 3, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். டிஸம்பர் 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் நல்லநிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வீடுவாகனப் பிராப்தியில்நல்ல சௌகரியம் தரும். வித்தியாவியாபாராதிகலைத் துறைகளில் உயர்வும் நன்மதிப்பும் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். டிஸம்பர் 16, 17, 23, 24, 25, 26, 27, 31 ஜனவரி 1, 4, 5, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். டிசம்பர் 18, 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபமானபலன்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல விதங்களில் பண வருமானம் வந்துநிறையும். சகோதரர் விசுவாசத்துடன் ஒத்துழைப்பு தருவர். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் அதிகசிலாக்கியப் பலனை ஏற்படுத்தும் டிஸம்பர் 28உ ஆனுல் திட்டமிட்டுள்ளகாரியங்கள் செம்மையாக நடைபெறுதல் நல்லன ஏற்படுதல் ஆகும். தாரபுத்திரர்களில் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். டிஸம்பர் 1o, 17, 18, 19, 26, 27, 28, 29, 30 ஜனவரி 2, 3, 6, 7, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். டிஸம்பர் 21 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

சிவமயம்

"ஞானசம்பந்தம்"

நாற்பதாவது ஆண்டு மலர்ப் பொருளடக்கம்

மார்கழிமாதச் சிறப்பு நாட்கள்

16—12—81 புதன். தனுர்பூஜாரம்பம், ஷடசீதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.
18—12—81 வெள்ளி, மகாகாளாஷ்டமி, காலபைரவாஷ்டமி.
23—12—81 புதன், பிரதோஷம்.
24—12—81 வியாழன், மாத சிவராத்திரி.
25—12—81 வெள்ளி, போதாயன அமாவாசை.
26—12—81 சனி, சர்வ அமாவாசை, ஹனுமத் ஜயந்தி.
28—12—81 திங்கள், கர்ப்போட்ட ஆரம்பம் 49-26.
31—12—81 வியாழன், சிதம்பரம், திருஉத்தரகோசமங்கை முதலிய திருத்தலங்களில் திருவெம்பாவை உற்சவ ஆரம்பம். திருவையாறு ஊஞ்சல் உற்சவாரம்பம்.
1— 1—82 வெள்ளி, தனுர்வியதீபாதம்.
4— 1—82 திங்கள், தருமை 11 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.
6— 1—82 புதன், சர்வ வைகுண்ட ஏகாதசி. வேளூர்க் கிருத்திகை. தருமை ஸ்ரீசண்முகர் கிருத்திகைஅபிஷேகம். கிருத்திகை விரதம்.
7— 1—82 வியாழன், பிரதோஷம்.
9— 1—82 சனி, பௌர்ணமி விரத பூஜை, மாதபூஜையில் நெய் அபிஷேகம், விடியற்காலம் ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். ஆருத்திராதரிசனம், சீகாழியில் ஸ்ரீ உமாமகேசுவரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு.
10— 1—82 ஞாயிறு, கர்ப்போட்ட நிவிருத்தி, 51-50.
11— 1—82 திங்கள், கூடாரைவல்லி.
12— 1—82 செவ்வாய், தருமை இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜை, ஆயில்யவிழா திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை.
13— 1—82 புதன், போகிப்பண்டிகை, சங்கடஹரசதுர்த்தி.

கடிதம்

தஞ்சை, திரு. நா. தனுக்கோடி அவர்களுக்கு வணக்கம்.

எங்கள்பேத்திக்குஏற்பட்ட இருமல்சளியில் 3 டாக்டரிடம் சிகிச்சை செய்தும் குணமாகாமல் பிராணவஸ்தையில் குழந்தை இருந்தது. "ஞானசம்பந்தம்" இதழில் நீங்கள் எழுதியிருக்கிற துளசிமகிமையைத்தெரிந்து தாங்கள் எழுதியிருந்தபடி பாலில் துளசியைக்காய்ச்சித் தேன்விட்டுக்குழந்தைக்குக்கொடுத்துவந்ததில் ஆச்சரியமான குணம் ஏற்பட்டு குழந்தை சவுக்கியமாக இருக்கிறாள். இதேபோல் ஒவ்வொருமாத இதழிலும் தாங்கள் மருத்துவ விஷயத்தைப் பிரசுரித்துவந்தால் ஏழை எளியவர்களுக்கு மிகமிக உதவியாகயிருக்கும். வாழ்க உங்கள்மருத்துவ செயல் - வளர்க உங்கள் தொண்டு.

V. L. V. லக்ஷிமிநாராயணன்,

15—10—81. ஈரோடு 638 183

மதிப்புரை

விடயபுரம் மகான் சரிதமும் — மகாமாயாவிலாச விளக்க உரையும்

எழுதியவர் திரு. கல்யாண். வெளியீடு திரிசக்திபதிப்பகம். 6 அந்தோனிதெரு. இராயப்பேட்டை சென்னை 14 பக்கங்கள் 155. விலை (சாதா) ரூ. 7—00. (பிளாஸ்டிக்) ரூ. 8—00.

திருவாருருக்கு அண்மையிலிருக்கும் விடயபுரத்தில் விளங்கும் ஸ்ரீ மகாமாயாதேவியின் (மாரியம்மனின்) உபாசகராக விளங்கிய ஸ்ரீ சட்டாம்பிள்ளை சுவாமிகளின் வரலாற்றையும் அவருக்கு அருள்புரிந்துவந்த அம்மையின் அருள் நலங்களையும் நம் உள்ளங்களைத் தொடும்வகையில் எழுதியுள்ளார் ஆசிரியர். வாழ்க்கையில் மக்கள் உணரவேண்டிய அரிய பல உண்மைகளை இந்நூல் வாயிலாகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ள இந்நூலாசிரியரின் அறிவராய்ச்சி பாராட்டத்தக்கது.

மகானின் வரலாற்றை வேதாகம உபநிடதங்கள் மற்றும் பல அருள்நூற் கருத்துக்களோடு ஆசிரியர் விளக்கியுள்ளமை போற்றத்தக்கது. மக்கள் மனந்திருந்திவாழ இந்நூலைக்கற்றல் பெரும் பயன்தரும்.

மகானுக்கும் அவர்வழி மக்கட்கும் அருள்புரிந்து வந்த மாரியம்மன் திருக்கோயில் திருப்பணிவேண்டுகோள் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. மிகவும் சிதிலமடைந்த அக்கோயிற்பணிக்கு அன்பர்கள் உதவி அருள் நலம்பெறலாம்.

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்

இராகம் - ரஞ்சனி] பல்லவி [தாளம் - ஆதி

தாயே தையல் நாயகியே — உனையே
சரணடைந்தேன் அம்மா தயை புரிவாயே (தாயே)

அனுபல்லவி

சேயேன் அலறுவதுன் திருச்செவி கேளாயோ
திருவுளம் இரங்கி இந்தச் சிறியனை ஆளாயோ (தாயே)

சரணம்

பரமன் வைத்தியனார் பக்கம் உறைந்தருள்வாய்
பஞ்சம் கவலைப்பிணி பகைதனைக் களைந்திடுவாய்
கரம்சிரம் குவித்தேன் இருகையா லணைத்திடுவாய்
கருணகரி இனியே கடைக்கண் பார்த்திடுவாய். (தாயே)

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-12-81